உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உஅ.] பிரமோதூதஹ ஆனிமீ [பகுதி-அ.
Vol. XXVIII. June-July 1930. No. 8.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உருஉ-ம் பக்கத்தொடர்ச்சி.]

மராமரப்படலம்.

இராமன் எய்து துளைத்த ஏழு மராமரங்களைப்பற்றிக்கூறுவது.
(ஆச்சாமரம், சாலமரம், மராமரம் என்பவை ஒருபொருள் குறித்தவை.)

மராமரவருணனை.

448 ஊழி பேரினும் பேர்வில ; உலகங்கள் உலைந்து
தாழும் காலத்தும் தாழ்வில ; தயங்குபே ரிருள்சூழ்
ஆழி மாநிலம் தாங்கிய அரும்பெருங் கிரிகள்
ஏழும் ஆண்டுசென் றொருவழி நின்றென இயைந்த.

இ - ள். (இராமன் அணுகிய ஏழு மராமரங்கள், ஒரு கற்பம் கழிதலும் மறுகற்பம் வருதலுமாகக்) கற்பங்கள் மாறி (மற்றெல்லாப் பொருள்களும் நிலைமாறி) னும் (தம் நிலை) மாறுதலில்லாதவைகள் ; (கற்பமுடிவிற் கடல் கரைகடந்து பெருகுதலால்) உலகம் நிலைகுலைந்து (கடல்நீருள்முழுகித்) தாழுங்காலத்திலும் (முழுகாமல் அந்நீர்க்கு மேற்பட்டுநின்று) தாழ்தலில்லாதவைகள் ; அரிய பெரிய ஏழு குலபருவதங்களும் (தாம் நின்ற இடங்களைவிட்டு) அவ்விடத்தில்வந்து, ஒருசேரநின்றாற்போல (உயரமும் பருமையும் மிகவும் அதிகமாக)ப் பொருந்தியன.

❀

ஊழி - கற்பம். உலகங்கள் என்பதில் கள் அசை. உலகம்— (வருணிக்கப்படாநின்ற மராமரங்கள் நிற்கும்) பூமி. தயங்குதல்- திகைத்தல். ஆழி - சக்கரம்; ஆகுபெயராய்ச் சக்கரவாளகிரியை யுணர்த்திநின்றது. மா நிலம்—பெரிய பூமி. தயங்கு பேர் இருள்சூழ் ஆழி மா நிலம்—திகைக்கும்படியான மிகுந்த இருள் சூழ்ந்த சக்கரவாள பருவதம் (சுற்றெல்லையாகச்) சூழ்ந்த பெரியபூமி. "'பேரிருள்' என்றது சக்கரவாளபருவதத்துக்கு அப்பாலுள்ள காடாந்தகாரத்தை". ஏழு கிரிகள் சத்தகுல பருவதங்களெனப்படுவன. அவை கைலை இமயம் மந்தாரம் விந்தம் நிடதம் ஏமகூடம் கந்தமாதநம் என்பன. ஆண்டு—அவ் விடம்—அம் மரங்கள் உள்ள வனம். ஒருவழி-(அவ்வனத்தில்) ஒரு (குறித்த) இடத்தில்.

'பேர்வினும்,' 'தயங்குபேருளால்,' 'குலகிரிகள்,' 'நின்றென வியர் தான்' என்பனவும் பாடங்கள்.

மலைக்குப் பூதரம் (பூ—பூமி; தரம்—தாங்கல்) என்ற பெயருண்மை யை 'நிலம்தாங்கிய கிரி' என்றது நினைவுறுத்துகின்றது.

இந்தக் கவியும் இதனை அடுத்து வருங் கவிகளும், இராமன் வல்லமையை மேம்படுத்தற்கு அவன் எய்து துளைத்த ஏழு மரங்கள் சாலப் பெரியவையும் வலியவையுமானவையென்று கூறுவனவாய், உயர்வுநவிற்சியா யுள்ளவை. தன்மைநவிற்சியணியின் சார்பினராய் உயர்வுநவிற்சியணியை வெறுப்பார் மிகப் பலருளராய இக் காலத்திற் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அது, களிப்பு விளைக்கும் கவி சாதுரியத்தோடுகூடியது தன்மைநவிற்சியாயினும் உயர்வுநவிற்சியாயி னும் ஏற்றுப் போற்றுதற்குரியது; அச் சாதுரியமில்லாதது எதுவாயி னும் புறக்கணித்தற்பாலதென்பது.

இக் கவிகளிற்போல அபரிமித அதிசயமும் ஆனந்தமும் விளைய விருக்கங்கள் விதந்துரைக்கப்பெற்றமை வேறு தமிழ்நூலெதனிலேனும் பிறமொழிநூலெதனிலேனும் உளதோவென்பது சந்தேகம்.

கவி, இராமன் எய்தற்கு எய்திய ஏழுமராமரங்களுக்கும் ஏற்ற உவமை மலைகளேயாமென மனத்துட் கருதினர். கருதியவர், ஏழென்

னும் எண்ணையுடைய அம் மரங்கள்போல, அவ்வெண்ணுடைய மலைகளிருந்தால், அவை உவமித்தற்குச் சிறப்பாயிருக்குமென்று சிந்தித்தார். சிந்தித்தவர், சத்தகுலபருவதங்கள் ஞாபகத்துக்குவர, அவைகளை அம் மரங்களுக்கு உவமையாக உரைக்க உன்னினார். உன்னியவர், ஏழுமரங்கள் ஓரிடத்திருக்க, ஏழ குலமலைகள் வெவ்வேறிடத்திருக்கும் பொருத்தக்குறைவு புலப்பட, அக் குறையை நிரப்புவாராய், இல்பொருளுவமையாக, அந்தச் சத்தகுலாசலங்கள் தாம் நின்ற இடங்களினின்று பெயர்ந்துசென்று ஓரிடத்துற்றனபோன்றன வென்றார்.

மரங்களுக்கு மலைகளை ஒப்பாக உரைத்தவர், மலைகளின் அடிப்பாகம் பாறையாயிருப்பது மரங்களின் அடிப்பாகத்துக்கும் பைஞ் சோலைகளையுடைய மலைகளின் மேற்பாகம் பச்சிலைக் கிளைக ளடர்ந்த மரங்களின் மேற்பாகத்துக்கும் ஒத்திருக்கும் காட்சி உளக்கண்ணெதிரே உதயமாக, அதனைக் கற்பனாசக்தியாற் புனைந்துரைப்பாராய் அடுத்த கவி கூறுகின்றார்.

449 கலைகொண் டோங்கிய மதியமும் கதிரவன் தானும்
தலைகண் டோடுதற் கருந்தவம் தொடங்குறும் சாரல்
மலைகண் டோமென்ப தல்லது, மலர்மிசை அயற்கும்,
இலைகண் டோமெனத் தெரிப்பரும் தரத்தன ஏழும்.

இ-ள், சந்திரனும் சூரியனும் (தனது*) உச்சியைக் கண்டு செல்லுதற்குத் தவம் (செய்யத்) தொடங்கும் அடிவாரத்தையுடைய (ஒரு) மலையைப் பார்த்தோம் என்று சொல்லுவதேயல்லாமல் இலையை (யுடைய மரத்தை)ப் பார்த்தோம் என்று பிரமதேவனும் சொல்லுதல் கூடாத உயர்வுடையன(வாக ஒவ்வொன்றும் உள்ளன, அந்த மரங்கள்) ஏழும்.

சாரல்—மலையடிவாரம். அயன்—பிரமன். தெரிப்பரும் என்பதில் அருமை கூடாமையைக்குறித்தது. தரம்—உயர்வு (இலக்கியச்சொல்லகராதி). தரம் தன்மையென்பது முந்திய உரை.

பிரமதேவன், இராமன் எய்யக் கருதிய ஏழ மராமரங்களுள் ஒன்றைப் பார்ப்பானானால், அவன் அதன் அடிப்பகுதியைமட்டும்

* மரத்தினது.

காணமுடியும். கண்டு, அந்த அடிப்பாகத்தை மலையென்று மயங்கு வான். மயங்கி, இந்த மலை சந்திரசூரியர் செல்லும் வானவீதிக்கு மிகவும் உயர்வாயிருப்பதால், அச் சந்திரசூரியர் இதன் உச்சியைக் காணப்பெறுதல் புகழ்ச்சிக்குரியதென்றும் அக் கருத்து த் தவஞ்செய்தாலன்றி நிறைவேறாதென்றும் தவஞ்செய்தற்குத் தக்க தானம் இம்மலைச் சாரலேயென்றும் எண்ணித் தவஞ்செய்யும்படியான தன்மையுடையது இந்த மலையென்று கருதுவான். அந்தப் பிரமதேவன் எந்த மரத்தின் அடிப்பாகத்தைப் பார்த்து இவ்வாறு கருதுவானே, அந்த மரத்தின் இலை(களோடு கூடியகிளை)களைக் காணுதலால், அம் மரத்தைப்பற்றிப் பேசுங்கால், 'மலையைக்கண்டோம்' என்பானேயன்றி 'மரத்தைக் கண்டோம்' என்னுன். அப்படிப்பட்ட மரங்கள் இராமன் எய்ய எண்ணிய ஏழுமரங்களென்பது கருத்து.

450 ஒக்க நாளெலாம் உழல்வன உலைவில ஆக,
மிக்கதோர்பொருள் உளதென வேறுகண் டிலமால்,
திக்கும் வானமும் செறிந்தஅத் தருநிழற் சீதம்
புக்கு நீங்கலின் தளர்வில, இரவிதேர்ப் புரவி.

இ-ள். சூரியனது தேர்க்குதிரைகள், ஒரேவிதமாக (ஒருநாள் போல) எல்லாநாள்களிலும் (ஓயாமல்) அலைவன. (ஆயினும் அவைகள்) இளைப்பில்லாதனவாதற்கு (த் தக்க காரணம் அம் மரங்களின் நிழலூடு புகுந்து போகுதலே. அக் குதிரைகளின் இளைப்பை நீக்குதற்கு அந் நிழலினும்) மிக்கது (ஆன) வேறொருபொருள் உண்டென்று (யாம்) கண்டிலேம் (அக் குதிரைகள் எல்லாத்) திசைகளிலும் வானத்திலும் நெருங்கி (மூடி)ய அந்த (ஏழு மரா) மரங்களின் குளிர்ந்த நிழலுட் புகுந்து நீங்குதலால் தளர்ச்சியில்லா திருக்கின்றன.

"தினந்தோறும் [நாள் முழுதும்] ஒரேவிதமாக (ஓயாமல்) ஓடிச் செல்பவையாகிய சூரியனது தேரிற் பூட்டப்பட்ட ஏழு குதிரைகள் சிறிதும் வருத்தமில்லாதனவாயிருத்தற்கு மேம்பட்டதொரு காரணம் உண்டென்று வேறே கண்டோமில்லை. எல்லாத் திக்குகளிலும் ஆகாயத்திலும் நெருங்கிப் பரந்த அம் மரங்களின் குளிர்ந்த நிழலை அடைந்து செல்வதனால் (அக் குதிரைகள்) தளர்ச்சியில்லாதனவாம்" என்பது முந்திய உரை.

ஒக்க–சமமாக–ஒரேவிதமாக. உழலல்– அலைதல் (தமிழ்ச்சொல் லகராதி). உலைவு – இளைப்பு (ஷை). மிக்கது – மேன்மையுடையது. செறிந்த–நெருங்கிய. சீதம்–குளிர்ச்சி. புக்கு–புகுந்து. இரவி – சூரியன். புரவி–குதிரை.

முந்தியகவியிற் சூரியனையும் இலையையும் (மாங்கள்) ஏழையும் சொல்லியவர், அவற்றின் தொடர்பாகச் சூரியனது பச்சையிலைநிற முடைய ஏழுகுதிரைகளை நினைந்து, அவைகள் ஒருகணமும் ஓயாமல் ஒவ்வொருநாளும் உலகைச் சுற்றி உழன்றும் களைப்புறாமையைக் கருதி, அதற்குக் காரணம் காணமுயன்று கண்டுபிடித்தார்போன்று, அந்தக் காரணத்தைக் கூறுவாராய், அது ஏழுகுதிரைகளும் ஏழுமராமரங்களின் குளிர்ந்த நிழல்வழியாக நிதமும் செல்லுதலால் அக் குதிரைகளுக்கு அன்றன் றுண்டாம் அயர்ச்சி அன்றன்று அகன்றுவிடுதலே யென்று அம் மரங்களின்பெருமையைப் பாவித் துணரப்பண்ணினர்.

[அம் மரங்கள், தமது மேற்பாகத்தைக் காணப்பெற்றோர் இவை மலர்கள் இவை நட்சத்திரங்களென்று பகுத்தறியப்படாதபடி உயரத்தே பூத்த ஒளிமிக்க பூக்கள் பொலிவனவாய், நட்சத்திரமண்டலத்தை அளாவி வளர்ந்த மகோன்னத வளர்ச்சியுடையவைகள்.

அம் மரங்களின் தளிர் இலை அரும்பு காய்கள் காற்று மோதி உதிர்வனவும், கனிகள் கனிந்து முதிர்ந்தும் காற்று மோதியும் உதிர்வன வும் ஆகியவைகள், பூமியில் விழாமல் ஆகாயகங்கையில் விழுந்து அந் நதியோடு பெரும்புறக்கடலிற் போய்ச் சேர்வனவாம்.

அம் மரங்கள், ஒவ்வொன்றும், வேர் பாதாளத்தின் அடிக்குக் கீழே யும் உச்சி விண்முகட்டுக்கு மேலேயும் செல்லப்பெற்று, மகாமேருவென் னும்படியும், முன் ஒருகால், இருகாலால் மூன்று லோகங்களையும் அளந்து கடந்த திரிவிக்கிரமனான மகாவிட்டுணு வென்னும்படியும் உள்ளவை.]

451. வள்ளல் இந்திரன் மைந்தற்கும் தம்பிக்கும் வயிர்த்த
உள்ள மேயென ஒன்றினொன் றுள்வயிர்ப் புடைய;
தெள்ளு நீரிடைக் கிடந்தபார் சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படம் குடைந்துகீழ்ப் போகிய வேர.

இ-ள். வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் (ஒருவருக்கொருவர் பகை மிகுதியால் இளக்கம் ஒழிந்து கடினப்பட்டு) வயிரமான மனங்கள் (வயிரத்தன்மையில் ஒன்றுக்கொன்று தாழாமை) போல ஒன்றுக்கொன்று (குறையாத) உள் வயிரம் உடையன (அம் மரங்கள். அவைகள்) பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனுடையபடத்தைத் துளைத்துக்கொண்டு கீழே போகிய வேரினையுடையன.

வள்ளல் - கொடையாளன். இந்திரன்மைந்தன் - வாலி. வயிர்த்தல் - வயிரித்தல் - வயிரமடைதல் - கடினப்படல். தெள்ளுதல் - தெளிதல். நீர் - கடல். இடை - மத்தி. நீரிடைக் கிடந்த பார். கடல் சூழ்ந்தபூமி. வெள்ளி வெண்படம் - வெள்ளிபோலும் வெண்மையான படம். வேர - வேரையுடையன. 'வயிரத்துள்ளமே' 'உள்வயிரத்த' என்பனவும் பாடங்கள்.

இராமன் வில்லின் நாணை எறிதல்.

[அப்படிப்பட்ட மரங்களை இராமன் பார்வையிட்டு எய்ய எண்ணி வில்லின் நாணை விரலால் எறிந்து எழுப்பிய இடங்காத் தொனி இவ் வுலகன்றி ஏனைய எல்லா உலகங்களும் அதிர ஆரவாரித்ததென்றால், பக்கத்தில்நின்றவர் பட்டபாட்டை எப்படிப் பகர்வது !]

இலக்குமணன் தவிர நாணொலிகேட்டவரெல்லாரும் அஞ்சி ஓடுதல்.

452. அரிந்த மன்சிலை நாண்நெடி தார்த்தலும், அமரர்
இரிந்து நீங்கினர்; கற்பத்தின் இறுதியென் றயிர்த்தார் :
பரிந்த தம்பியே பாங்குநின் றான்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை உரைசெயிற் பழி அவர்ப் புணரும்.

இ-ள். இராமனது வில்லின்நாண் மிகுதியாக ஒலித்தமாத்திரத்தில், விண்ணவர்கள் வெருவி ஓடிப்போய்க் கற்பாந்தகாலம் (வந்துவிட்டதுபோலும்) என்று சந்தேகங் கொண்டார்கள். இலக்குமணன் ஒருவனே (இராமன்) பக்கம் (விட்டுப் பெயராமல்) நின்றான். மற்றைய (சுக்கிரீவன் முதலிய) பலரும் செய்த (செயலின்) தன்மையைச் சொன்னால், அவர்களைப் பழி அடையும்.

அரிந்தமன் - விட்டுணு இராமன். ஆர்த்தல் - ஒலித்தல். அமரர் - தேவர். இரிதல் - அஞ்சுதல் - ஓடுதல். இறுதி - முடிவு. அயிர்த்தல் - சந்தேகித்தல். பரிதல் - அன்புறல். பாங்கு - பக்கம். பல்லோர் - பலர். அவர்ப் புணரும் - அவரைச் சேரும்.

'அமரர் இரிந்து நீங்கினர்' என இங்குவருவானேனெனில், இராவணாதி இராக்கதரால் இமிசிக்கப்பட்ட இமையோர் இராவணனுள்பட இராக்கதரெல்லாரையும் சங்கரிப்பதாகச் சங்கற்பஞ்செய்திருக்கிற இராமன்செயல்களை இடைவிடாமல் அந்தரத்தினின்று எப்போதும் கவனித்துப் பார்த்துக்கொண்டிருப்போராதலால், அவர்கள், அபூர்வமும் அருமையும் ஆச்சரியமுமான செயலாகிய மராமரமெய்தலை அவாவோடு எதிர்பார்த்துநின்றனர்; அப்படி நின்றவர், இராமன்வில்லின் நாணொலி கேட்டுப் பயந்து, அம்பெய்தல் காணும் அவாவை அறியாமலே அகலவிட்டு ஓடினாரென்பதாம்.

சுக்கிரீவன் முதலியோர், இராமன் வின்னாணொலி கேட்டபோது, செய்தசெயல் பயந்தோடியதே. அவர்கள், வீரராயுள்ளார் செய்யத்தகாத அந்தப் பேடிச்செய்கையைச் செய்ததைச் செப்பினால், அவரைப் பழி சேருமென்று, சமற்காரமாக, அவர்கள் பயந்தோடினார்களென்பதைச் சொல்லாமற் சொன்னார்.

இராமன் அம்பெய்தல்.

[அப்படி ஓடின வானர வீரரில், பயம் ஒருபக்கம் இருக்க, 'எய்தலைக் காண்போமாக, அம் முயற்சியில் உயிர்போகநேரினும் நேருக' என்று துணிந்து திரும்பிய அநுமானாதியோரை 'என்ன துணிவப்பா இவர்களுக்கு! இவர்களன்றோ தீரர்! என்று ஏனைய வானரவீரரேறுகள் மெச்சிப்புகழ்ந்து வியந்துகொண்டிருக்கும்போது, இராமன், ஓர் அம்பை யெடுத்து, நாணில் தொடுத்து, முதுகுற இழுத்து, முடுக்கி விடுத்தான்.]

இராமபாணம் ஏழுமரங்களையன்றிக் கீழேழுலகையும் உருவித் திரும்புதல்.

153 ஏழு மாமரம் உருவிக், கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழும் ஊடுபுக் குருவிப்பின் உடன்அடுத் தியன்ற

ஏழி லாமையால், மீண்டதவ் விராகவன் பகழி ;
ஏழு கண்டபின் உருவுமால் : ஒழிவதன் றின்னும்.

இ - ள். (அப்படி விடுத்த) அந்த ராமபாணம், (அதற்கு இலக்காகக் குறித்த அந்த) ஏழு பெரிய மரங்களையும் துளைத்து(ச் சென்று, அது சென்ற திசையில் இருந்த) கீழுலகமென்று சொல்லப்பட்ட (உலகங்கள்) ஏழையும் ஊடு நுழைந்து உருவிச் சென்று), அப்பால் (அவ் வுலகங்களை) அடுத்துப் பொருந்திய ஏழு (என்ற இலக்கமுடைய பொருள்) இல்லாமையினால், (தனது இருப்பிடமான இராமன் அம்பறாத் தூணிக்குத்) திரும்பிவந்துசேர்ந்தது : (அது திரும்பிவிட்டதனால் இம்மட்டோடொழிந்ததென் றெண்ணவேண்டா.) இன்னமும் (எப்போதாயினும்) ஏழு (ஆகவுள்ள பொருள்களைக்) காணுமானால் (அவைகளையும்) துளைக்கவேசெய்யும் ; (துளையாது சும்மாவிருந்து) ஒழிவதன்று.

மா - பெருமை. மா மரம் - பெரிய மரம். இசைத்தல் - சொல்லல். ஊடு - உள் ; நடு. புக்கு - புகுந்து - நுழைந்து. இயலல் - பொருந்தல். மீளல் - திரும்புதல். பகழி - அம்பு. இன்னும் - இன்னமும் - மறுபடியும்.

"கீழுலகமேழ் - அதலம், விதலம், சுதலம், தாரதலம், ரஸாதலம், மகாதலம், பாதாளம் என்பன. மூன்றாமடியிலும் நான்காமடியிலும் ஏழு - ஆகுபெயர். கண்டபின் - பின்னீற்று எதிர்கால வினையெச்சம் ஆல் - அசை."

இந்த அம்புக்கு ஏழென்றவையெல்லாம் இலக்கோ என்று
ஏழெண்ணுடைய இருதிணைப்பொருள்களெல்லாம் நடுங்குதல்.

454 ஏழு வேலையும், உலகமே லுயர்ந்தன வேழும்,
ஏழு குன்றமும், இருடிகள் எழுவரும், புரவி
ஏழும், மங்கையர் எழுவரும், நடுங்கினர் ; 'என்னே !
ஏழு பெற்றதோ, இக்கணைக் கிலக்கம் !' என் றெண்ணி.

இ - ள். (சத்தசமுத்திரமென்ற) ஏழுகடல்களும் (சதுர்த்தசபுவனமென்ற பதினான்கு உலகங்களுள் தலைக்கப்பட்ட கீழேழ் உலகங்கள்போக எஞ்சிய) மேலேழுலகங்களும் (சத்தகுலாசலங்களென்ற) ஏழு

மலைகளும் (சத்தருஷிகளென்ற) ஏழு இருடிகளும் (சூரியன்தேரிற் பூட்டிய சத்தசந்தசுகளென்னும்) ஏழுகுதிரைகளும் (சத்தமாதரென்ற) ஏழுமாதரும் 'என்னே! இந்த அம்புக்கு ஏழு (என்னும் தொகையுடைய பொருளின மெதுவும்) இலக்காகப் பெற்றதோ?' என்று எண்ணி(ப் பயந்து) நடுங்கினர்.

வேலை - சமுத்திரம். புரவி - குதிரை. உயர்ந்தன (ஆன) மேல் ஏழு உலகமும் எனக் கூட்டுக. 'பெற்றதோ' என்ற ஒருமைப் பய னிலைக்குச் சொல்லாற் பொருந்தாத 'ஏழு' என்ற எழுவாயைப் பொரு ளாற் பொருந்தும்படி அந்த 'ஏழு' என்பதற்கு 'ஏழென்னும் தொகையுடைய பொருளினம்' எனப் பொருள்கூறியிருத்தல் காண்க. 'ஏழென்னுந் தொகையுடைய தெல்லாம் குறியாகப் பெற்றதோ?' என்பது முந்திய உரை. அஃறிணையெழுவாய்கள் மிகுந்தும் உயர் திணையெழுவாய்கள் குறைந்து மிருந்தும் எல்லா எழுவாய்களும் 'நடுங்கினர்' என்ற உயர்திணைப்பயனிலை கொண்டது, உயர்திணையின் சிறப்புப்பற்றி என்க. 'என்னே' ஓர் அதிசய இரக்கக் குறிப்புச்சொல். 'நடுங்கின' 'என்ப' என்பனவும் பாடங்கள்.

"ஏழென்னும் எண்ணினையுடைய பலபொருள்களை ஒருங்கே யமைத்தது, கவிசமத்காரம். ஏழுவேலை - உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின் மயமானவை. மேலே ழுலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜநலோகம், மஹர் லோகம், தபோலோகம், சத்தியலோகம் என இவை. ஏழுகுன்றம் - கைலை, இமயம், மந்தாம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன: இவை ஸப்தகுலாசல மெனப்படும். இருடிகள் எழுவர் - அத்திரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காசியபர் ஆங்கிரஸர்: இவர்க் குப் பிறவாறு முரைப்பர். காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற ஏழு சந்தசுகளும் சூரியனது தேரின் குதிரைகளென நூல்கள் கூறும். மங்கைய ரெழுவர் - பிராஹ்மி, மாஹேச்வரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, சாமுண்டி."[1]

இராமனைச் சுக்கிரீவன் வணங்கித் துதிக்க, மற்ற வானரர் மகிழ்ந்து வாழ்த்தல்.

[இவ்வாறாக, ஏழென்னும் எண்ணுடைய எல்லாரும் யாவையும், எண்ணி முதலிற் கலங்கினாரென்றாலும், பின்பு அந்த அம்பு தரும மூர்த்தியான தாசரதியினுடைய படையாதலால் தீங்குசெய்யாதென்று தெளிந்தார்கள். அப்போது, சுக்கிரீவன், இராகவன் பாதங்களில் விழுந்து பணிந்து "நீ தேவாதிதேவனே! உன்னை எனக்குத் துணையாக இங்கே வரச்செய்தது எனது நல்லூழ். இனி எனக்கு ஆகாத காரியம் யாதும் இல்லை. தாயே போலும் தயாபரனான உனக்கு அடியேன் அடியார்க்கடியேன்" என்று தாழ்மையோடு சொன்னான். மாருதி முதலிய மற்றைய வானரர் மகிழ்ச்சிக் கள்ளுண்டு மயக்கந்தலைக்கேறி 'வாலிகாலன்வாழி!' என்று ஆடிப் பாடிக் களித்தார்கள்.

துந்துபிவரலாற்றைச் சுக்கிரீவன் சொல்லத் தொடங்குதல்.

இராமன், அந்த மலைமேல் வேறொரு மலை கிடந்தாற்போலக் கிடந்த எருமைமுகமுடைய துந்துபி யென்னும் அசுரனது கங்காளத்தைக் கண்டு, "இது, இயமனூரும் எருமைக்கடா இறந்ததன் எலும்பா?" என்று வினவச் சுக்கிரீவன் சொல்லுவானானான். (கங்காளம் - உடல் முழு எலும்பு.)]

மராமரப்படலம் முற்றிற்று.

துந்துபிப் படலம்.

துந்துபி யென்னும் அசுரன் எலும்பை இலக்குமணன் கால்விரலால் நெடுந் தொலை போய்விழ எறிந்ததைக் கூறுவது. "இவ் வசுரனது முழக்கம் துந்துபி யென்னும் வாத்தியத்தினது பேரொலியை ஒத்தலரல், இவனுக்கு இப் பெயர். துந்துபி - பேரிகை."

வாலி துந்துபியைக் கொன்றெறிந்ததனால், மதங்கமுனி ஆச்சிரமம் அசுத்தமாக, அம் முனி வாலியைச் சபித்தல்.

["சீரொருமை என்னும் முகமும் பேரிகை என்னும் குரலும் துந்துபி என்னும் பெயருமுடைய ஓர் அசுரன், விட்டுணுவிடஞ்சென்று

போருக்கழைக்க, விட்டுணு சிவனிடம் செல்லச் சொல்ல, சிவன் இந்திரனிடமும் இந்திரன் வாலியிடமும் போகச் சொல்லிப் போக்குக் காட்டி ஒருவர்பின் னொருவராகக் கடத்திவிடக் கடைசியாக வாலியையு அடைந்து "போர்புரிய வா" என்றான். வலிந்து சண்டைக்கு வந்தவனும் வந்தசண்டையை விடாதவனும் நெடுங்காலம் கடும்போர் புரிந்தனர். முடிவில், வாலி, துந்துபியை மண்ணில் மொத்துண்டு மண்டையுடைந்து காலொடிந்து இரத்தங் கக்கக் காலால் எற்றிக் கையாற் குத்தித் தூக்கியெடுத்துத் தூரம்போய்விழ எறிந்தான். அதனால், துந்துபியின் உடம்பு இந்த மலையில் விழுந்திட, உயிர் அந்த உலகை அடைந்தது. ஆவி நீங்கிய ஆகமும் அதனினின்று சிந்திய இரத்தமும் மதங்க முனியின் ஆச்சிரமத்தை வாலாமை* செய்ததைக்கண்டு, அம் முனிவன், கோபங்கொண்டு, இது வாலிசெயலென்று ஞானதிட்டியாலறிந்து "அவன் இங்கு வருவானுயின், தலை வெடித்துச் சாகக் கடவன்; அவனைச் சேர்ந்தார் போந்தாற் கல்லாகக் கடவர்" எனச் சபித்தான்" என்று சுக்கிரீவன் சொன்னான்.

இலக்குமணன் துந்துபி எலும்பை வெகுதூரம்போய்விழ எறிதல்.

இராமன் "இந்த ஆச்சிரமத்தை அசுத்தப்படுத்திய இதனை அப்புறப்படுத்து" என, இலக்குமணன் எளிதாக அதனைக் கால்விரலால் எற்ற, அது வெகுதூரம் போய்விழுந்தது. அந்த அரிய செயலைக் கண்ட வானரர் ஆச்சரியமடைந்து உற்சாகமுற்று ஆரவாரித்தனர். அப்போது, சுக்கிரீவன், இராமனை நோக்கி "நான் தெரிவிக்கவேண்டியதொன்றுண்டு" என்று தெரிவிப்பானுயினான்.]

துந்துபிப் படலம் முற்றிற்று.

---

*வாலாமை — அசுத்தம்.

கலன்காண் படலம்.

சீதையின் ஆபாணங்களைச் சுக்கிரீவன் காட்ட இராமன் கண்டதைக் கூறுவது. (கலன் - ஆபாணம்).

சுக்கிரீவன் சீதைநகைகளை இராமனுக்குக் காட்டல்.

["முன் ஒரு நாள், இந்த இடத்திலே, யாங்கள் இருந்தபோது, வானத்திலே மிகவும் உயர்ந்ததானத்திலே ஒரு மாது கதறியது காதில் விழுந்தது. அவள், இராவணன் எடுத்துக்கொண்டுபோன சீதை போலும். அனையாள், தன் ஆபாணங்களை ஒரு சேலையுள்வைத்து முடிந்து யாங்கள் இருந்த இடத்தில் எறிந்தாள். அவைகள் சேதமுறு மற் கையேந்தி ஏற்றுச் சேமமாக வைத்திருக்கின்றேம்." என்று சுக்கிரீவன் சொல்லி அந்த முடிப்பை எடுத்துக்கொண்டுவந்து இராமனுக்குக் காட்டினான்.]

சீதையின் ஆபரணங்களால் இராமன்பால் உண்டான மெய்ப்பாடுகள்.*

455. தெரிவுற நோக்கினன், தெரிவை மெய் அணி,
எரிகனல் எய்திய மெழுகின் யாக்கை போல்
உருகினன் என்கிலம்! உயிருக் கூற்றமாய்ப்
பருகினன் என்கிலம்! பகர்வ தென்கொலாம்!

இ - ள். (அந்த முடிப்பிலிருந்த) ஆபாணங்களை (ச் சீதையினுடையவைதாமாவென்று) தெரிந்துகொள்ளும்படி (இராமன்) பார்த்தான். (பார்க்கவே, சுவாலித்து) எரிகின்ற தீயை அடைந்த மெழுகுருவம்போல (மேனி நெகிழ்ந்து) உருகினனென்று சொல்லவும் வல்லேமல்லேம்; (அமுதம்போல) உயிருக்குப் பலம் (அளிப்பது) ஆக(க் கருதி அந்த ஆபாணங்களை) விழுங்கினன்(போல ஆசையோடு பார்த்தான்) என்று சொல்லவும் வல்லேமல்லேம்: (அவன் அடைந்த நிலைமையை) யாதென்று சொல்வது? (இன்னதென்றுசொல்ல இயலவில்லையென்றபடி.)

---

*மெய்ப்பாடுகள் - அகத்துநிகழ்ச்சிகளைப் புறத்தார்க்குப் புலப்படுத்தும் உடற்குறிகள்.

தெரிவை - பெண். மெய் - தேகம். அணி - ஆபாணம். மெழுகின் என்பதில் இன் சாரியை. யாக்கை - உடம்பு. என்கிலம் என்பதில் கில் ஆற்ற லுணர்த்தும் இடைநிலைச்சொல். ஊற்றம் - வலி - பலம். ஆய் ஆக என்னும் எச்சத்திரிபு. பருகுதல் - விழுங்குதல். என் - யாது. கொல் ஆம் இரண்டும் அசை. 'உருகுதல்' தேகம் குழைந்து மெலிதலையும் ஊற்றமாய்ப் பருகுதல் உடம்பு பலப்பட்டுப் பூரித்தலையும் குறிப்பித்தன.

உருகியது பிரிவாற்றுமையாலும் பருகியது ஆபாணத்தை அடைந்தமைபோல ஆபாணத்தை அணிந்தவளை அடையலாமென்னும் ஆசையாலும் என்க. ஆபாணதரிசன* மாகிய ஒரே காரணத்தால், உருகுதலும் பருகுதலுமாகிய ஒன்றுக்கொன் றெதிரிடையான காரியங் கள் நிகழ்ந்தன என இக்கவியிலும், அந்த ஆபரணபரிசனத்தால்†, நீங்கின உணர்வு மீண்டது, நீங்காதிருந்த உயிர் வதைக்கப்பட்டாற்போல வருந்தியது என்ற இரண்டு எதிரிடைச் செயல்களும் தேகம் சந்தனத் தாற் குளிர்ந்தாற்போலக் குளிர்ந்தது, தீயினல் வெதும்பினுற்போல வெதும்பியது என்ற வேறிரண்டு மாறுபட்ட நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன எனப் பின்வரும் 'விட்டபே ருணர்வினை' என்ற கவியிலும் அநுதாப மும் ஆச்சரியமும் உண்டாகக் கூறினர். இவ்வாறே, சீதை ஆபாணங் களைக் கண்ட இராமன்மெய்ப்பாடுகள்போல, இராமன்கணையாழியைக் கண்ட சீதையின்மெய்ப்பாடுகள் நிகழ்ந்ததை 'வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போ - டேங்கினள்' (உருக்காட்டுபடலம் ௬௬) என்றும் 'ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிர்மணி ஆழி ஆன்ற - திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால் - விரக மென் பதனின் வந்த வெங்கொழுந் தீயினல்வெந் - துருகிய துடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளுற' (திருவடிதொழுதபடலம் ௭௭) என்றும் கூறியிருத்தல் காண்க.

456. நல்குவ தென்இனி? நங்கை கொங்கையைப்
புல்கிய பூணும்அக் கொங்கை போன்றன;
அல்குலின் அணிகளும் அல்குல் ஆயின;
பல்கலன் பிறவும்அப் படிவம் ஆனவே.

---

* தரிசனம்—காணுகை. † பரிசனம்—தொடுகை.

இ-ள். (சீதையினல் அணியப்பட்டு அவள்) தனங்களைப் பொருந்தியிருந்த ஆபரணங்கள் அந்தத் தனங்கள் போன்றன; (அவ்வாறே) மற்றைய பல ஆபரணங்களும் (அவை அவை அணியப்பட்டிருந்த அந்த) அந்த அங்கங்கள் போன்றன: (இவ்வாறு இராமனுக்கு மகிழ்ச்சி அளித்த ஆபரணங்கள்) இதன்மேல் அளிப்பது (ஆன மகிழ்ச்சி) யாது (உளது)?

நல்கு - உதவு. என் - யாது. இனி - இதன்மேல் - இதற்கதிகமாக. புல்கு - புல்லு - பொருந்து. பூண் - ஆபரணம். அல்குல் - அரை (தமிழகராதி). படிவம் - உடலுறுப்பு (தமிழ்ப் பெயராகராதி). ஆன - போன்றன. 'ஆதல்' போலல் எனப் பொருள்படல் "ஆள்வா ரிலிமாடாவேனே" என்பதிற் காண்க. உம்மை பிரித்துப் 'பிற பல்கலனும்' என இயைக்க. 'படிக ளாயவே' என்ற பாடமும் உண்டு. அதில், கள் அசை.

சீதையின் ஆபரணங்கள் அவைகளை அணிந்திருந்த அவள் அங்கங்கள்போல இராமனல் பாவிக்கப்பட்டு அவன் அவைகளைத் தரிசித்த போதும் பரிசித்தபோதும் அவனுக்கு இன்பம் ஈந்தன வென்பதாம்.

457. விட்டபே ருணர்வினை விளித்த என்கெனே!
அட்டன உயிரை அவ் வணிகள் என்கெனே!
கொட்டின சாந்தெனக் குளிர்த்த என்கெனே!
சுட்டன என்கெனே! யாது சொல்லுகேன்!

இ-ள். (இராமன் திறத்தில் அந்த ஆபரணங்கள்) நீங்கின உணர்வை (மீண்டு வர) அழைத்தனவென்று சொல்லுவேனே! உயிரைக் கொன்றன (போல வருந்தச் செய்தன) என்று சொல்வேனே! பூசின சந்தனம்போல (அவன் மேனியை)க் குளிரச் செய்தன வென்று சொல்வேனே! தீயைப் போலத் தபிக்கச் செய்தனவென்று சொல்வேனே! என்ன வென்று சொல்வேன்!

விடுதல் - நீங்குதல். விளித்தல் - அழைத்தல். என்கென் - என்று சொல்வேன். அடுதல் - கொல்லுதல். அட்டன - கொன்றன. அணி - ஆபரணம். கொட்டுதல் - பூசுதல் (தமிழ்ப் பெயராகராதி); அப்புதல் (தமிழகராதி). 'குளிர்த்த,' குளிர்ந்த என்பதன் பிறவினை: குளிரச் செய்தன என்பது பொருள். குளிர்ந்த என்பதும் பாடம்.

"பிரிந்திருக்கின்ற சமயத்தில் அப் பிரிந்த பொருளை நினைப்பூட்டு கின்ற பொருள்கள் யாவும் ஒருபால் மகிழ்ச்சியையும் ஒருபால் வருத் தத்தையும் விளைத்தல் இயல்பாதலால், இங்ஙனம் மாறி மாறிக் கூறினர். ....இராமபிரானுக்கு இயல்பாகவுள்ள பேரறிவு பிராட்டியைப் பிரிந்ததனாலாகிய வருத்தத்தால் நீங்கியிருந்தது அவளது அணிகலங் களைக் கண்டதனால் மீண்டுவாலாயிற்றென்பது முதல்வாக்கியத்தின் கருத்தும், அவ் வணிகலங்கள் அவளது அழகிய அவயவங்களை நினைப் பூட்டிப் பிரிவுத் துயரை மிகுவித்து அப் பெருமானுக்கு மாணவேதனை யைச் செய்வனவு மாயின வென்பது இரண்டாம்வாக்கியத்தின்கருத் தும், அவை அவனது விரகதாபத்தைத் தணிவித்தனவென்பது மூன் றாம்வாக்கியத்தின்கருத்தும், அத் தாபத்தை மிகுவிப்பனவுமாயின வென்பது நான்காம்வாக்கியத்தின் கருத்துமாம். இன்னபடியென்று ஒன்றைத் துணிந்துகூறமாட்டாமையின், இங்ஙனம் விகற்பித்து, 'யாது சொல்லுகேன்' எனலாயிற்று."

453. மோந்திட நறுமலர் ஆன; மொய்ம்பினில்
ஏந்திட உத்தரி யத்தை ஏய்ந்தன;
சாந்தமும் ஆய்ஒளி தழுவப் போர்த்தலால்
பூந்துகில் ஆயஅப் பூவை பூண்களே.

இ - ள். (இராமனுக்கு) சீதையின் ஆபரணங்கள், மோந்துபார்த் தற்கு நறு (மணமுடைய) மலர்கள் போன்றன; தோள்களில் ஏந்த உத்தரீயம்போலாயின; (அவ் வாபரணங்களை மோந்தபோதும் ஏந்திய போதும் அவற்றின்) ஒளி (அவன் உடம்பைப் பொதிந்தாற்போலப்) பொருந்தலாற் சந்தனம் போன்று, (அவ்வொளி உடலை) மூடுதலால் அழகிய (போர்வை) வஸ்திரமும் போன்றன.

நறுமை – நன்மணம் (ஐங்குறுநூறு). ஆன – போன்றன. மொய்ம்பு - தோள். உத்தரீயம், அங்கவஸ்திரம், மேலாடை என்பவை ஒருபொருள்குறித்தவை. ஏய்ந்தன - போன்றன. சாந்தம் - சந்தனம். ஆய் - போன்று. தழுவல் - பொருந்தல். பூந்துகில் - அழகிய வஸ் திரம்; பூப்போல மென்மையான ஆடையுமாம். ஆய - போன்றன. பூவை - பெண். பூண் - ஆபரணம். உம்மைபிரித்து ஒளிதழுவச் சாந்தமாய் (ஒளி) போர்த்தலாற் பூந்துகிலும் ஆய என இயைக்க,

சாந்தமும் என்பதில் உள்ள உம்மையை அசைநிலையாகவுங் கொள்ளலாம் செய்யுளாதலால், பூந்துகிலுக்குப்பின் உம்மை தொக்கதாகக்கொண்டு, ஒளி (உடம்பைத்) தழுவப் போர்த்தலால், 'சாந்தமும் ஆய்ப் பூந்துகிலும் ஆய' எனவும் கொள்ளலாம். பூந்துகிலாயின என்பதும் பாடம்.

சோகித்த இராமனைச் சுக்கிரீவன் தேளிவித்தல்.

[இவ்வாறாக, இராமபிரான், சீதாதேவியின் ஆபரணத்தால், மகிழ்ச்சியும் வருத்தமும் மாறி மாறி அடைந்தபோது, இறுதியாக விரகதாப வேதனை, விடமேறினாற்போல, மிகுதியாக, அதனை ஆற்றும் ஆற்றலின்றி, உள்ளமும் உடலும் ஒருங்கு தளர்ந்து, நினைப்பும் மூச்சும் நெடும்பொழுது நீங்கித் தன்வசமிழந்து, தரையிற் சாய்ந்துவிழுந் தருணத்தில், அருகிலிருந்த சுக்கிரீவன், அவனைத் தழுவித் தாங்கி, அவனுடைய பரிதாபநிலைமையைப் பார்க்கச் சகியாதுத் துக்கம் மிகுந்து சொல்லுகின்றான். "அந்தோ! இந்த ஆபரணங்களைக் காட்டி உன் உயிரைப் போக்கினேன்போலும்! ஐயா! வருந்தாதே! தேவி எந்த உலகத்திலிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து, அவளைத் திருடிய தீயவனை மாயச்செய்து, அவளை மீட்டுக்கொண்டுவந்து கொடுத்து என் சேவகத்தைக் காட்டுவேன். அவளைக் கவர்ந்த காதகன் கரங்கள் இருபதும் சிரங்கள் ஒருபதும் உன் அம்பு ஒன்றுக்கும் பற்றுமோ! அப்படிப்பட்ட பெருமையுடைய நீ அந்த அற்பனைத் தண்டித்தற்கு எழுந்தருளல் வேண்டா. இங்கேயே யிருந்தருள். அடியேன் சென்று அவன் சிரங்களைத் திருகி யெறிந்து தேவியைச் சிறையினின்று திருப்பிக்கொண்டு வந்து சேர்ப்பேன். சிறியேன் சிறுதொண்டைச் சிறிது திருக்கண் சார்த்தியருள்.

"நீ இட்ட கட்டளையை இயற்றும் ஏவலரோ, ஆற்றல்மிக்க அநுமானுதியரோம்; தம்பியோ, போராற்றல் பெரிதுள்ள பெருந்தகை; நீயோ ஆர்துணையும் வேண்டாத அசகாயசூரன். இப்படியெல்லாமிருக்க, எப்படி உன்னைக் குறைவுடையவனாகக் கருதுகின்றாய்? உன்னாலாகாத காரியம் ஒன்றுமின்று. மும்மூர்த்திகளுள் எம்மூர்த்தியும் உன்னை ஒவ்வார். ஒவ்வொருவராக ஒவ்வுதலில்லாத அவ் விறைவர் மூவரும், ஒன்றசேர்ந்து ஒருவரானாலன்றி உனக்கு ஒப்பாகார். எனது சிறு

குறைதீர்த்தல் பிற்பாடாகுக. இப்போது யாங்கள் தேவியைத் தேடச் செல்வேம். விடைதருக" என்று சுக்கிரீவன் சொன்னான்.

அவ்வாறு சொல்லவே, அதுவரையும் அவன் சொல்லியதைக் கண்மூடியிருந்தபடியே கேட்பதன்றிச் சொல்லக்கடவதில்லாதிருந்தத னாற் சும்மா இருந்த இராமன், 'விடைதருக' என்றதற்கு மறுமொழி அளிக்கவேண்டிய அவசியத்தால் அறிவு கிளப்பப்பெற்றுக் கண்திறந்து அன்புடன் நோக்கிச் சொல்லுகின்றான்.

சானகியைச் சிறைமீட்காமைக்காகத் தாசரதி தன்னை நொந்துகொள்ளல்.

"தீவினையேன் சிவனோடிருக்கும்போதே அவள் ஆபரணங்களை அகற்றிவிட்டாள். நாயகன் சாதுமுன் நகைகளைநீத்த நாயகி என் காலத்துக்குமுன்காலத்தில் எவளேனும் இருந்ததுண்டோ! இதனால் யான் இருந்தும் இறந்தேனேயன்றோ! அவள், 'நாயகன் வருவான், நம்மை மீட்பான்' என்றிருக்க, நான் வீணே நாட்போக்கிக்கொண்டிருக் கின்றேன்! அவளைக் காத்தற்குதவாமற்போனதன்றி மீட்டற்கும் உதவாதிருக்கிற வில்லை வெட்கமின்றி வீணே சுமந்துகொண்டிருக்கின் றேன்! தக்கோராயுள்ளோர், தம்மொடு எவ்வகைத் தொடர்புமில்லாமல் தற்செயலாகத் தாம் செல்லும்வழியிற் செல்லும் தையலாரை ஆரேனும் துன்புறுத்துவாரானால், அவரைத் தடுத்து அவரோடு அமர்புரிந்து ஆவி யும் ஈகுவர். யானோ, என்னையே பரமாகநம்பிய என் இல்லாள்துன்பத் தையும் தீர்க்காதிருக்கின்றேன். எனது முன்னோர் கடலைத்தோண்டினர். கங்கையை வானகத்தினின்று மண்ணகத்துக்கு வரச்செய்தனர். அத் தகைய அருஞ்செயல்கள் புரிந்தவர்கள் பெருங்குலத்திற் பிறந்த யானோ, என் மனைவியின்வருத்தத்தையும் மாற்றமாட்டாத மகா நிர்ப்பாக்கியனா யிருக்கின்றேன். எனது பூர்வீகர்புகழைப் புகல்வானேன். என் தந்தை, இந்திரனை வென்று இந்திரலோகத்தைக் கைப்பற்றிய, அந்தகனும் அஞ் சும் சம்பராசுரனைச் சயித்து, இந்திரனுக்கு அவன் இராச்சியத்தை ஈந்து அரிய புகழ்பூண்டான். அவன்வயிற்றிற்பிறந்த யான் பெரிய பழி பூண்டேன். என் தந்தை சத்தியவாக்குத்தவறாதபடி காக்க, முடி சூடாத யான், மனைவியை மாற்றான் கவராமற் காவாத பழிசூடினேன்",

என்று நொந்து துன்பம் மேலிடச் சோர்வானுன இராமனைச் சுக்கிரீவன், ஆறுதல்வார்த்தைகள்கூறித் தேறுதலடையச்செய்தான்.

தேறுதலடைந்தவன், "சிநேகித! நீ தேற்றியதனால் தேறினேன். தேற்றாதிருந்தால், செத்திருப்பேன். இனி, எனக்குச் சாதலே தாரகம். உயிர்விடா தொழியேன். ஆயின், உன்குறை தீர்த்தாலன்றி உயிரை விடேன்," என்றான்.

இராமனாதியர் வாலி வாழ்ந்த மலையை அடைதல்.

அப்போது, அநுமான் அஞ்சலித்து "அடியேன் அறிவித்துக் கொள்ளுவதுள்ளது. அதனைத் திருச்செவி சேர்த்தருள். வாலியை மடித்து மன்னவன் சுக்கிரீவனாகச்செய்து, சேனையைத் திரட்டினா லன்றித் தேவியைத் தேடலரிது. அவளை ஒளித்துவைத்திருக்கும் இராக்கதரிருப்பிடத்தை யாமறியேம். அவளை ஒவ்வோரிடமாகத் தேடினால், அதற்கு அளவற்ற ஆண்டு வேண்டும். அன்றி, அரக்கர், அவளை அடிக்கடி வெவ்வேறிடங்களிற் கொண்டுபோய்வைப்பார்கள். ஆதலால், எல்லா இடங்களிலும் ஏககாலத்திற் சென்று துருவுதல் இன்றியமையாதது. அது, படையாலன்றி முடியாது. எம்மவர் படை எழுபது வெள்ள முள்ளது. ஊழிக்காலக் கடல்போல உலகமுழுதும் ஒருமிக்கச் சென்று தேடவல்லது" என்றான்.

அதுகேட்டு, இராமன் "வாலியிடம் போவோம். வாருங்கள்" என, எல்லாரும் புறப்பட்டனர். அவர்கள், சிங்கம் புலிகள் திரண்டு செல்லல்போல, மலைமேல் மலையாகப் பல மலைகளேறிப் பல யோசனை உயரம் போய் வாலியிருந்த மலையை அடைந்தனர். அடைந்தவர்கள், அப்பாற் செய்யவேண்டியது யாதென ஆலோசனை செய்வாராயினர்.

கலன்காண்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

தமிழ்ப்பாஷையின் விசித்திரங்கள்.

சொல்லமைப்பின் திறத்தாலும் தொன்மையாலும் மாட்சிபெற்று விளங்கும் எம் அரிய தமிழ்மொழியின் சொற்கள் எவ்வாறு உண்டாகித் தொகை விரிந்தன எனும் துறையைப் புது ஆராய்ச்சிமுறையாற் கண்டவிடத்து அளவில்லா மகிழ்ச்சி யடைந்தோம். அம்மகிழ்ச்சியில் "செந்தமிழ்"ப் பாராயணர்களும் பங்குபற்றுமாறு ஈண்டு ஒரு சில சொற்களின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுதும்.

I. உள் எனுஞ் சொல்.

"உள்" என்பது அகத்தேயிருப்பது, மறைந்தது எனும் அர்த்தங்கொண்ட ஒரு முதற்சொல். இச் சொல் பலுகியவிதத்தை ஆராய்வாம். இது உள்ளம் என்றாகி மனத்தைக்குறித்தல் ஒன்று. உள் (ள்) அம் என்பதில் "அம்" விகுதி "அது" என்னும் மற்றொரு முதற்சொல்லின் விகாரமாம். இதனை ஈண்டு விரிப்பிற் பெருகும். இனி உள் எனுஞ் சொல் உழு என்றாகி, அகத்தே செலுத்தல் நிலத்தைக் கிளைத்தல் எனப் பொருள்படும். உளு என்பது கிளைத்துக்கொண்டு செல்கின்ற ஒருசெந்து. உசு என்பது உளுவின் வேறொரு உருவம் (தொல்காப்பியம் எழுத் 75). இது உழுவான் எனவும்படும். புழு என்ற சொல்லும் உழு என்பதிலிருந்து வந்ததே என்பது இப்போது விளக்கமாகும். புழு=உழுகின்ற செந்து. ஈண்டு ஓர் சொல்லமைப்புவிதி நோக்கத்தக்கது. அவ்விதி யாதெனில், உயிரெழுத்து முதலாய்நின்று ஒவ்வோர்பொருளை விளக்கிய முதற்சொற்கள், பின் மெய்யெழுத்துக்களைத் தலையிற் கொள்ளுமிடத்து, அப்பொருளோடு ஒப்புமையுள்ள வேறுபொருள்களை விளக்குவனவாயின என்பதாம். இவ்வாறுதான், உளு எனும் சொல் பகரமெய் தலைபிற்பெற்றமையினால், உழுதலைச் சிறப்பியல்பாகக்கொண்ட செந்துவைச்சுட்டும் வண்மையுள்ள புழு எனும் பெயரீடாயிற்று. ழகாரமும் ளகாரமும் சொல்வேறுபாட்டின்பொருட்டு, பொருள்களைப் பிரித்துப் பெயரிடுசெய்யும் மாறிவருதலையும் கவனிக்க. தம்முட் பிறப்பொத்த ஈற்றுமெய்கள் மாறி வழங்கப்பட்டன முகத்தால், என்பதும் சொல்லமைப்புவிதிகளுள் ஒன்றாம்.

இதுகாறும் கூறியவற்றால் "உள்" என்பது ஒரு முதற்சொல் எனவும், "உழு" அதன்வழியாய்ப் பிறந்த வழிச்சொல் எனவும், இவ் வழிச்சொல் பகரமெய்யைத் தலையிடத்துக் கொண்டதனால் பின்னும் புழு எனும் வேறொரு வழிச்சொல் பிறந்ததெனவும் பெறப்பட்டது. பகரமெய்யைப் போலக் ககர சகராதிகளையும் சொன்முதலாக்கி வெவ்வேறு வழிச்சொற்கள் பிறந்தமையைப் பின்னாற் காட்டுதும். இவ்வமயத்திற் பகரமெய்யைத் தலையிற்கொண்ட "உள்" எனுந் தாய்ச்சொல்லின் மகாருட் சில்லோரை மட்டும் தெரிவிப்பாம்.

புள்ளி எனுஞ் சொல்லின் ஆதி அர்த்தம் யாது? துளை, அல்லது ஓட்டையேயாம். இதற்குச் சம்பந்தமான "பொள்ளுதல்" எனுஞ் சொல்லும் ஓட்டையாக்குதல் எனும் பொருள் கொண்டதே. புழு என்று ஆகிய "உள்" சொல்லே புள்ளி என்றும் பொள்ளுதல் என்றும் வந்தது. துளையும் தகரமெய் தலைப்பெற்றுவந்த "உள்" சொல்லே என,—ஓட்டையும் ஊடு ஒடு, ஓட்டு எனும் வரலாறுகொண்டு எழுந்த "உள்" சொல்லே என நுண்மதியாற் கண்டு உணர்க. உகரமும் ஒகர ஓகாரங்களும் பிறப்பொத்த உயிர்களாதலால் தம்முள் மாறுபடுவது இயல்பெனவும் காண்க. அப்பால், பொள்ளுதலிலிருந்து பொளி எனுஞ்சொல் வருவது. பொளி—துளை. ஆபின் பொழிதல் துளையுள் விடுதல், ஊற்றுதலாம். (இவ் வூற்றுதலும் "உள்" சொல்லினின்றே வேறொருவழியாய்ப் பிறந்தது ; உள், ஊட்டு, ஊற்று) பொள்ளுதல் ஒருகால் பொல்லுதல் என்றும் உச்சரிக்கப்பட்டமைக்குப் "பொல்லாமணி" [துளையாத இரத்தினம்] எனும் தொடரும் சான்று. புள், பொள், பொல் எனும் அடிகளினின்றே பொட்டு, பொத்தல், பொத்து, பொந்து பாந்து, புற்று, பொறி, பொள்ளல், பொல்லு, புல்லு, புலம், புலன் எனப் பலசொற்கள் உண்டாயின. இவை யாவும் முதற்கண் துளை அல்லது ஓட்டையுடைமையையே விளக்கும். புல் எனும்பெயர் பூடுகளுக்கும், மூங்கில், பனை ஆதிபவற்றிற்கும் பொதுவாயினமை உட்டுளைத் தன்மையினாலேயாம் என்பதைத் தொல்காப்பியரும் "புறக்காழனவே புல்லென மொழிப" என்பதனாற் கூறிப் போந்தார். எம் ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் துளை அல்லது ஓட்டையிலிருந்து பெயர் அடைந்த விசித்திரத்தை உற்றுநோக்குக.

இனி "உள்" என்பது பொள்ளல், புலம் என ஆயினமைபோல புள்ளுவம், புழை, புரை, பொய், புதல், புதவு, புண் ஆதிய சொற்களாகவும் திரிந்து, அடித்தளத்தில் துளைப்பொருளையும், சிறப்பாய் வெவ்வேறு துளையுடைய பொருள்களையும் குறிப்பதாயிற்று. இவ்வாருக, புழையும் துளையும் அர்த்தத்திலும் உற்பத்தியிலும் ஒன்றேயாம். புழைக்கடை=வெளிவாயில். புழைக்கை அல்லது பூழ்க்கை, பூட்கை எனும் யானைப்பெயர் துளையுடைய கையாகிய தும்பிக்கை காரணமாய் எழுந்தது. பிழை எனும் சொல் புழையின் மறுரூபமாம். "பொள்ளலான" காரியமே பிழை எனப்படும். புரைச்சொல்லின் ஆதி அர்த்தத்தை "புரைக்கேறுதல்" எனுந் தொடரிற் காண்க. இங்குப் புரை =காற்றுக்குழாய். (குழாய், குழல் ஆதியனவும் "உள்" சொல்லினின்று பிறந்தனவே.) ஓட்டை அல்லது பொள்ளலின் நிமித்தமே "புரை" குற்றம் எனும் அர்த்தமுங் கொண்டது; "புரைதீர்ந்த நன்மை" என்றதிற் போல. பொய் என்பது பொந்து எனும் தலை அர்த்தம் கொண்டது. அசத்தியம் என்பது பொள்ளலான பேச்சே ஆதலாற் பொய் எனப்பட்டது. புண்ணும் தேகத்திற் செய்யப்படும் துளையாம். இதனுலன்றே சிங்களத்திற் புண்ணுக்கு எமது துளைச்சொல்லின் விகாரமாகிய "துவால" எனும் பெயர் வழங்குகின்றது. ஏனைய சொற்களையும் இவ்வாறு ஆராய்ந்து அறிக.

இனி, உள் எனும் மூதற்சொல், ககரம் ஆதிய பிற மெய்களையும் மூதலிற்பெற்றுப் பலவேறு வழிச்சொற்களை ஆக்கிவிட்டமையைத் தெரிக்கப்புகுமுன், மூதற்சொற்களானவை யாவை, வழிச்சொற்கள் எழுந்தமை யாதுபற்றி எனச் சுருக்கிக் கூறுவாம்.

மானுடன் தன் புலன்களுக்கு எட்டிய பொருள்கள் செயல்களுக்கு முன்பு, இடம்பற்றிய சுட்டுக்களைக்கொண்டு, அண்மையிலுள்ளன, சேய்மையினுள்ளன, மேலுள்ளன, கீழுள்ளன எனும் குறிப்புக்களின்வழியாகவே பெயரிடலாயினுன். இப்பெயரீடுகள்தாம் மூதற்சொற்களாம். இவற்றுள், யாம் எடுத்தாண்ட "உள்" சொல், சேய்மையின் வேருெரு நோக்காகிய மறைவாந்தன்மை, அன்றேல், அகத்தேயிருத்தல் என்னுங் குறிப்புக்கு உதாகரணமாம். இனி, அண்மைக்கு அஃது எனுஞ்சொல்லும் மேலுறுந் தன்மைக்கு, எய் எனுஞ்சொல்லும், கீழுறுந்தன்மைக்கு,

இழி எனுஞ்சொல்லும் உதாகரணமாதல் காண்க. அஃகு-தல்=நெருங்கி நெருங்கிச் சமீபத்தில் வரல், அன்றேற் குறைதல். எய்-தல்=மேலெழல், செலுத்துதல் இழ்-தல்=கீழ்விழுதல்.

அப்பால், முதற்கண் இடம்பற்றிய குறிப்புக்களைக்கொண்டு ஆக்கிய முதற்சொற்களானவை பொருள்களின் குணஞ்செயல்களை வேண்டிய மட்டும் துலாம்பரமாய் விளக்கும் பெற்றியில்லாது கிடப்பக்கண்ட மானுடன் அவ்வவற்றிற்கு அதி விளக்கமான வெவ்வேறு பெயர் இட்டு வழங்குமுகத்தால், சொற்களைப் பெருக்குதலிற் றலையிட்டான். இச்சொற்பெருக்கத்தின்பொருட்டே வழிச்சொற்கள் ஏற்பட்டன. வழிச்சொற்களை ஆக்குதலிற் கையாளப்பெற்ற பல உபாயங்களுள் தற்போதைக்கு யாம் எடுத்துக்காட்டுவது சொன்முதலில் ஒவ்வோர் மெய்யை வருவித்தல் ஒன்றுமேயாம்.

உள் எனும் முதற்சொல் பகரமெய்யைத் தலையிற்கொண்டபோது புழு ஆதியன வழிச்சொற்கள் பிறந்து உள்ளாந்தன்மையை வெவ்வேறு விதத்திற் காட்டுகின்ற வெவ்வேறு பொருள் செயல்களைக் கண்டோம். இனி அது ககரமெய் முதலீட்டினுல் அடைந்த மாற்றங்களுட் சிலவற்றைக் காட்டுதும்.

புழைஎனும் வழிச்சொல் உள்எனும் முதற்சொல்லிலிருந்து பிறந்து துளைப்பொருளைத் தந்தமையைக் கண்டோம் அன்றோ? அதனைப்போலக் குழை என ஒரு உருவமும் "உள்" சொல்லிலிருந்து ககரமெய்தலையிற் பெறுதலால் உண்டாகும். "கோடி நுண்டுகிலுங் குழையும்" எனுஞ் சீவகசிந்தாமணிப்பிரயோகங் காண்க. துளையுடைமையாலேதான் சங்குக்கும் காதுக்கும் குழைப்பெயர் ஏற்பட்டமையும் எண்க. இக்குழையும், புழையும், துளையும், ஒருபொருளன; உள் எனும் ஒரு அடியிலிருந்தே யாம் எடுத்தோதிய விதியின்செய்தியாய்ப் பிறப்பன. குழைதான் குழல் என விகாரப்பட்டுத் துளையுடையதோர் புறம்பானபொருளை, இசைக்கருவிவிசேடத்தைச் சுட்டும். குழல் எனும் சொல், அப்பால், வேறு துளையுடைய பொருள்களைப் பொது இயல்பாய்க் காட்டுமிடத்துக் குழாய் எனவும், இரைப்பையைத் தொடர்ந்துள்ள குழாய்விசேடத்தைக் குறிக்கும்பொருட்டுக் குடல் எனவும் வரும். குடலை என்பது வேறொரு குழாய்விசேடம். தொண்டையின் ஓர் உறுப்பும் குழாய்த்

தன்மையினின்று குரல்—வளை எனப்படும். குடல், குரல் என்பனவற்றில், "குழல்" சொல்லின் இடைநின்ற ழகாரம், தன்னோடு பிறப்பொத்த டகர ரகங்களாயினமை சொல்வேறுபாடுபண்ணும்பொருட்டாம். இதுவும் சொல்லமைப்பின்கண் நிகழும் ஒரு பிரபலவிதியென முன்னரும் கூறியுள்ளோம். குரல்-வளையிலுள்ள "குரல்" சொல் குழலைக்குறித்தலினின்றும் பேச்சொலியை விளக்குவதானமையும் ஒன்று. "குளறு"வதிற் குழல் சப்தம் மீண்டும் தொனிக்கின்றது. பின்னும் "குழல்" சொல் சுருண்டிருக்கும் தன்மையின், ஒப்புமையால் சுருட்டிமுடிக்கப்படும் பெண்மயிருக்கும் பெயராயிற்று குழலல்=சுருளுதல். அதனால் குழல், குழற்சிகொண்ட மயிர். "குழலுடைச்சிகழிகை" என்றதில் இச்சொல் படிப்படியாய்ப் புது அர்த்தங்கொண்ட முறைமைக் காண்க. இக்குழல், குரல் எனவும் நின்று பெண்மயிரைச்சுட்டும். "நல்லார் குரலுற்றம்" எனும் (கலித்தொகை 88.) மேற்கோளிற்போல.

இனி, குழல், குடல் ஆகியன சொற்கள் "உள்" சொல்லினின்றும் பிறந்தவாறு, குளித்தல், குடைதல் ஆகியனவும் தோன்றின. குளித்தல், உட்புகுதல், மூழ்குதல் "கூர்ங்கணை குளிப்ப", "பணிலம் பல குளிக்கோ" என்னும் மேற்கோள்களிற்போல. குடைதலும் இவ் ஆதிப் பொருள்களையே கொண்டிருத்தலைக் "குடைந்துலகனைத்தையும் நாடும்" "குடைந்து நீராடுமாதர்" எனும் கம்பர்வாக்குக்களிற் காண்க. இவை பிறந்தவழியே "உள்" அடியினின்றும், ககர முதனிலை உபகாரத்தால், குழி, குழிசி, குடி, குண்டு, குளம், குடம், குட்டை, குண்டம், குண்டாளம், குண்டிகை, குண்டை, குடுகு, குடுவை, குந்தம் ஆகியன வியுற்பன்னங்கள்மட்டுமன்று, இவற்றோடு உறவுகொள்ளுதனபோற்றோன்றுகின்ற குடில், கூடம், குடிலம், குடிகை, குடும்பம், குடும்பி, குடுமி, குடம்பை, குரம்பை, கூடு, கூடை, கொட்டில், கோட்டம், கோட்டை, கூடாரம், கோது, குடை, கூத்து, குடா, கோடு, கொடுமை, குரூரம், கொடி, கூம்பு, கும்பிடு, கோடு, (மலையுச்சி), கொக்கு, கொளுக்கி, கொடுப்பு ஆதிய பலப்பலசொற்கள் கிளைத்துப் பெருகிப் பலப்பல அர்த்தங்கள் படைத்துநிற்பதை ஆராய்ந்து கண்டு மகிழ்க. இவற்றுள் குண்டிகை, குடிலம், குடிகை, குடும்பம், கூடாரம், குரூரம் என்பன வடசொல்.

II. தோல் எனுஞ் சோல்.

இதுவரை ஓர் முதற்சொல்லை எடுத்துக்கொண்டு அதினின்றும் பிறந்த வழிச்சொற்கள் சிலவற்றைக் காட்டும் முறையைப் பின்பற்றினேம். இனி இதற்கு எதிர்முகமான முறையைக் கைக்கொண்டு, ஒவ்வோர் வழிச்சொல் எவ்வாறு தன் அடியினின்றும் வேற்றுமையடைந்து வாலாயிற்று எனத் தெரிப்பாம். சொல்லமைப்பின்கண் நிகழ்கின்ற பொதுவிதிகள் சிலவற்றை விளக்குதற்கு முந்திபமுறை ஏற்றதாயிற்று. பிந்தியமுறையானது அறியாததொன்றை ஆராய்ந்தறிவதினூற் பிறக்கும் மகிழ்ச்சியோடு ஆராய்ச்சியின்கண் ஊக்கத்தையும் கிளர்த்திவிடும்.

தொல் எனுஞ் சொல்லின் தோற்றுவாய் யாது? அதனை யாம் துருவி அறிந்துகொள்ளுதல் கூடுமோ? "தமிழ் அமைப்புற்ற வரலாறு" எனும் எமது நூலினைப் படித்தோர் ஆயாசமின்றி அதனை அறிந்துகொள்வர். அறிந்துகொள்ளுதலும், அதனோடு பிறப்பொற்றுமை பூண்ட எத்துணையோ இலக்கிய அருஞ்சொற்களின் உட்பொருளை விளக்கமாய்க் கண்டு மகிழ்வர்.

தொல் எனுஞ் சொல்லோடு தொன்மை, தொன்று என்பன ஒற்றுமைகொண்டிருத்தல் தானே போதரும். ஆயின், தொலைதல், துலை, தூரம் ஆகியனவும் அவ்வாறுனவையா? ஆம்; இது வெளிப்படையாயிராவிடினும் ஆராயும்போது நன்றாக நிச்சயிக்கப்படும். தொலை, துலை, தூரம் என்னும் இவ்வுருவங்கள் துளை எனும் வழிச்சொல்லின் விகாரங்களாம். இதுதான் உள் எனும் முதற்சொல்லினின்று வருவது என முன்னர்க் கண்டுகொண்டோம். "உள்" சொல்லினின்று புழை, குழை என்பன வரும்முறையே துளையும் வருவது. துளை எனுஞ் சொல்லில் உள் எனும் அடியின் ஒட்டைப்பொருள் (அகத்தேயிருக்குந் தன்மை, உட்செல்லுந்தன்மை) தோன்றும். ஆயின் தொலை ஆதிய சொற்களில் அவ் அடிக்குரிய மறைந்திருக்கும் தன்மை எனும் மற்றப் பொருள் தோன்றும். யாது யாது மறைந்திருப்பது அது அது புலன்களுக்கு எட்டாதது, சேய்மையிலுள்ளது என்றாகும். ஆதலால் தான், தொலை, துலை, தூரம் என்பன சொற்கட்குச் சேய்மைப்பொருள் ஏற்பட்டது. இடம்பற்றிய சேய்மையிலுள்ளது துலையாம். அவ்வாறு சேய்மைக்கண் செல்லுதல் தொலைதலாம். தொலைதலே (ஓடிமறைதலே)

தோற்றல், தோல்வி எனவும் வருவது. "கூற்றம் வரினும் தொலையான்றன் னட்டார்க்குத் - தோற்றலை நாணாதோன் குன்று" எனும் கலித்தொகைப் பிரயோகங் காண்க. இனி, காலம்பற்றிய சேய்மையிலுள்ளது தொன்மையாம். தொன்று என்பதற்குரிய அர்த்தங்களிலொன்று ஊழ் என்பது. இத் தொன்றும் ஊழும் ஒரேசொல்லாய் நிலைபெறுதலைக் கண்டு மகிழ்க. தொலையாய் (காலம்பற்றிய சேய்மைக்கண்) இருப்பது தொன்று. உள்ளாய் (மறைதலினாற் சேய்மைபெற்று) இருப்பது ஊழ். ஊழி எனும் சொல்லும் சேய்மையினால் நீடித்த காலத்தைக் குறித்தலை நோக்குக.

துலைச்சொல்லைப்பற்றி யாம் சொல்லியவற்றிற்கு மாற்றம் இராது. ஆயின் தூரம் எனும் சொல்லை வடமொழியாமென எண்ணியிருப்போர் யாம் காட்டிய அதன் பிறப்பு முறையை ஒப்பப் பின்னிடுவார். துலையைப்போலவே தூரமும் தமிழ்ச்சொல்லாமென்பதில் ஒருசிறிதும் மயக்கமின்று. அதுமட்டா? வடமொழிச் சொற்களில் நூற்றுக்குத் தொண்ணூறு எந் தமிழ் அடிகளினின்றே பிறந்து இக்காலம் உருவம் மாறி நிற்கின்றன என்பது எமது ஆராய்ச்சியிற் றிறம்பாத ஒப்பனைகளால் ஏற்பட்ட ஓர் உண்மையாம். இவ்வாறே வடமொழித் துவாரமும் தோரணமும் துர், துக்கம் ஆதியனவுமான பலப்பல சொற்கள் அடிப்படையில் எம் தமிழ்ச் சொற்களே எனக் காணலாம்.

துளை துவாரமாயினமை எவ்வாறு? துளை ஆதியில் துள என நின்றமை கன்னடம், மலையாளம் ஆதிய பாகதமொழிகளிலுள்ள வழக்காற் காணப்படும். தமிழில் அகாவீறு ஐகாரமாக மெலிந்துவிடுதல் பெருவழக்கு. இனி வடமொழியாளர் எம் துளச்சொல்லை த்வள என உச்சரிக்கும் போக்குடையவர் என்பது பல எடுத்துக்காட்டுக்களால் நிலைபெறுவதோர் உண்மை நாமும் தோய்த்தலைத் துவைத்தல், எனவும், தாழ்தலைத் தவழல், தளர்தல் எனவும் வழங்குதல் அறியப்பட்டதன்றோ? இவ்வாறே வடமொழியில் எமது "துள" த்வள என வந்ததோடமையாது, தலைநீண்டு த்வாள என்றும் ளகாரம் தன்னோடு பிறப்பொத்த ரகரமாகித் த்வார என்றும் முடிந்தது. சிங்களத்தில் துவால என்றே இச்சொல் நின்றுவிட்டது. துவால=ஒட்டை, புண். துவாரம்=ஒட்டை, வாயில். துர் என்றதும் ஒட்டையான, தகாத எனப் பொருள்

கொண்டு வரும். துக்கமும் அதுவேயாம். அப்பால், தோரணச்சொல்லின் பொருளும் ஒட்டையாகிய வாயிலாம். இதன் வரன்முறை எமது தொடு எனுஞ்சொல்லின் வரன்முறையை ஒத்தது. தொடு= உட்செலுத்து, ஒட்டையாக்கு, கிண்டு. டகரம் ரகரமாதற்கு, தொடு எனுஞ் சொல் துருவு என நிற்றலையுங் காண்க. துருவுதல்=உட்செலுத்தல். இனி "தொடுதல்" எமது மொழியில் தோளல், தொள்ளல், தொண்டை, தோண்டுதல், தோட்டம், தோணி (தோண்டிக் குடைந்தமரம்) ஆதியன உருவங்களையும், துருவுதல், துழாவுதல், துழவை (துழாவியிட்ட கூழ், ஊத்துப்பாட்டு) ஆதியவற்றையும் அடையும். தொடுதல் எனுஞ் சொற்கு, உள்ளிடுதல் எனும் பொருளில், உணவருந்தல் எனும் அர்த்தமும் அமைந்திருத்தல் காண்க. இவ்வர்த்தமே உண்ணல் எனும் சொல்லினுக்கும் உண்டு. உண்ணல்=உள்ளிடுதல். இது மூதற்சொல்லினின்று நேரே பிறந்தசொல். தொடுதல் வழிச்சொல்லடியாய்ப் பிறந்தசொல். இரண்டும் பிறப்பிலும் பொருளிலும் ஒற்றுமைகொள்வதைநோக்கி மகிழ்க. "தொடுதல்"தான் அதேபொருளோடு துளைதல், திளைதல், துற்றல், துய்த்தல் என நிற்றலையுங் காண்க.

இவ்வாராய்ச்சிவழியே, தொழுவை, தொள்கு, தொள்ளை, தோசம், தொழில், தொழும்பு, தொண்டு, தோழன், ஊழியம், உஞற்றுதல், தொய்வு, தோய்தல், துவைத்தல், தோயம், துயர், துயில் ஆதிய சொற்களின் வரன்முறையையும் துருவி அறிக.

III. வாங்கல் எனுஞ் சொல்.

வாங்கல் என்பது பாவைவழக்கில் "ஏற்றுக்கொள்ளல்" எனும் பொருளுடைய ஒரு சொல்லாம். இலக்கியங்களில் இதற்கு வளைத்தல், வளைவு எனும் பொருள் நிலவும் (சூடாமணி நிகண்டு 8, 5; 1ட, ௩, 3). வளைவு எனும் பொருள் "வாங்கலாய் நடத்தல்" எனும் வழக்கச்சொற்றொடரில் நன்றாய்த் தொனிக்கின்றது. "வாக்குக்கண்" என்பது சமநிலையில்லாத கோணலானபார்வை எனப் பொருள்படும். இந்தப்பிரயோகத்திலும் வாங்கல் (வாக்கு) நேருக்கு எதிர்மறையான வளைவுப் பொருளையே கொள்ளுதல் தேற்றம். இனி இஃதான் வங்கு என நிற்றலும் ஒன்று. உட்குழிந்துதோன்றுவது வங்கு. குழிந்து ஆழ்ந்த கண்ணுள்ளானைப் பாவைவழக்கில் வங்கன் என்பர். கிணற்றுள் காணப்படும் பொந்தும் வங்காம். இலக்கியங்களில் இது மலைமுழைஞ்சில் என வரும் (பிங்கலந்தை 504).

இப்பிரயோகங்களினால் வாங்கல், வங்கு என்பன சொற்கள் வளைதல் எனும் ஆதிஉருவத்தின் வேற்றுருவங்களே என்பது பெறப்படும். ஆயின் வளைதல் ஆனது வாங்கல் என ஆயினமையை ஐயந்திரிபின்றித் தெளிந்துகொள்ளற்கு, இவ்விரு உருவங்கட்கும் இடைநின்ற வேறு ஓர் உருவத்தை நாம் அறிதல்வேண்டும். அதுதான் வாங்கல் எனுஞ் சொல்லினுக்கு ஏற்றுக்கொள்ளல் எனும் பொருள் தோன்றுதற்கு இடனாய்நின்ற வணங்கல் எனும் வேறொரு உருவமாம். வளைதலும், வணங்கலும் ஆதியில் ஒருசொல்லே. சொற்களைப் பெருக்குமுகத்தால் வளை என்பதிலுள்ள ளகரம் தன்னொடு பிறப்பொத்த ணகரமாகி, வண எனும் அடியைத் தோற்றுவித்தது. வணங்கல் வளைதலேயாமென் பதை "வரிதேற்றாய் நீயென வணங்கிறை யவன்பற்றி" எனும் கலித் தொகையிற் காண்க: வணங்கிறை=வளைந்த முன்கை. இனி, வளை தல் வணங்கலாகி, வாங்கல் என உச்சாரணபேதத்தால் திரிந்து தனக் கினமான வேறொருபொருளை யுணர்த்துதற்கு உபகாரமாய்நின்றதை யறிந்து மகிழ்க. ஏற்றுக்கொள்ளலெல்லாம் வளைதலே வணங்கலே, வாங்கலே எனக் காண்க. ஆதலாலன்றோ "ஏற்பதிகழ்ச்சி" என மூதாட்டி யும் கூறினள். யாதொன்றை வாங்குவோர் வளைதலும், பல்லைக்காட்டுத லும், இச்சகம் பேசுதலும் முதலிய அவினயங்களைப் பொருந்துதல் சக சம். ஆதலாலேதான் "கொடுப்பார்கை மேலே வாங்குவார்கை கீழே" எனும் நாடோடி வாக்கியமும் எழுந்தது. சொல்லொடு பொருளாயும் "ஏற்பதிகழ்ச்சி" என்பது மேலும்கீழும் எனும் பாகுபாட்டைக்குறித்து நிற்றலை "தமிழமைப்புற்றவரலா"ற்றினைப் படித்தோர் சிரமமின்றிக் கண்டுகொள்வார். ஏற்பது இகழ்ச்சி எனும் இவை இரண்டு சொல்லும் முறையே இயல் இழி எனும் அடிகளினின்று பிறந்தன என்பதும் இவ்வடிகளிரண்டினும் ஆதி அர்த்தம் "கீழ்ப்படு"வதாமென்பதும் அன்னோர்க்கு விகசிதமாகும்.

வாங்கல் எனுஞ்சொல்லின் பிதிர்வழி வணங்கல், வளைதல் எனக் கண்டாம். அப்பால் வளைதலின் வரலாறியாது? வளைதற்சொல் உள் எனுஞ்சொல்லின் விகாரமாம், பேச்சொலிப்பிறப்பின்கண் உகரமும் வகர மும் தம்முள் ஒத்தன. இதழ்குவித்து உச்சரிப்பது இரு ஒலிகட்கும் பொதுமையன்றோ? இதனால் உகரம் எளிதில் வகரமாய்த்திரியும் இயல்புடையது. தமிழில் வகரம் பெரும்பான்மை இதழ்குவியாது,

கீ ழி த ழை ழ மேல்வாய்ப்பற்களின்கீழ் மடித்து உச்சரிக்கப்படினும், (தொல்காப். எழுத்ததி. 98.) ஒலிப்பிறப்பளவில் அது இதழ்குவித்தெழுந்ததே என்பது பிறமொழிகளின் ஒப்புமையால் நன்ருக நிச்சயிக்கப்படும். ஆகவே, அகப்பொருண்மை கொண்ட உள் எனுஞ் சொல் சுழல் என வந்து உட்புறத்தை நாடுதலை (சுழலுதலை) விளக்கியது. வளை எனவும் வந்து அக்கருத்தையே தந்திட்டது. வளைதல்=உள்ளாகச் சாய்தல்.

தமிழ்மக்கள் உள் அல்லது அகத்தேயிருத்தல் எனும் ஓர் மனக்குறிப்பை அடியாக வைத்துக்கொண்டு, அதனைச் சிறிது சிறிதாக வேறுபடுத்து, அதனோடு உறவுகொண்ட வெவ்வேறு சிந்தனைகளைப் படிப்படியாய் வேறுபட்ட ஓரே சொல்லால் விளக்கியிருக்கும்பெற்றியைக் கண்டு யாரே வியப்பெய்தாதார் ? உள்ளாகச் சாய்வது வளைதல் எனப்பட்டது. வளைவதினுல் மேலோர்க்கு மரியாதை செய்தல் வணங்கல் என வைக்கப்பட்டது ; வளைந்து ஏற்றல், வளைந்து நடத்தல், வாங்கல் ஆயிற்று. வளைவான பார்வை வாக்கெனப்பட்டது. இவற்ருேடு சம்பந்தங் கொண்டெழுந்த வேறு பலப்பல சொற்களையும் ஆராய்ந்து காண்க. ஒருசிலவற்றை இங்குக் காட்டுதும் : வாள் (ஆயுதம்), வள்ளல் (பாம்பு), வளவு, வில்லு, வளையல், வட்டம், வந்தனை, வக்கிரம், வஞ்சித்தல் ஆதியன. இவற்றுட் பிந்திய மூன்றும் வடசொல்.

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்.

உ

தொல்காப்பியச் சொல்லதிகாரக்* குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[ருகூ-ம் பக்கத்தொடர்ச்சி.]

432-வது சூத்திரம். வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும் ....

433-வது சூத்திரம். பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே,

இவ் விரண்டுசூத்திரங்களுக்கும் உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் கூறும் உரை ஒன்றே. தெய்வச்சிலையார் கூறுவது வேறு. பின்னவர் உரை பொருந்துமா என ஆராயற்பாலது.

434-வது சூத்திரம். ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின.

435-வது சூத்திரம். எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின.

இச்சூத்திரங்களின் உட்கருத்தில் உரையாசிரியர் முதலிய மூவர் மதமும் ஒன்று. தெய்வச்சிலையாரது வேறு. இவர் மதமே ஏற்புடைத்து.

436-வது சூத்திரம். உம்மை யெச்ச மிருவீற் றானும்...... ....

'உம்மை யெச்சம்' என்பதற்கு உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் எச்சவும்மை என்றும், சேனாவரையர் உம்மையோடுகூடிய எஞ்சு பொருட்கிளவி என்றும் தெய்வச்சிலையார் உம்மையாகிய எச்சம் என்றும் பொருள்கொண்டனர்.

---

*ஈண்டுக் குறிக்கப்பட்ட சூத்திரங்களின்குறிப்பை விரிவாய்ச் சமீபத்தில் வெளிவந்துள்ள 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்ற நூலிற் காணலாம்.

அந்நூல் கிடைக்குமிடங்கள்:—

(1) பி. எஸ். கணேச சாஸ்திரி அவர்கள், M.A., L.T.,
38, பாண்டியன் சந்து, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

(2) பி. எஸ். மணியன், 66A, பெல்ரோடு, திருவல்லிக்கேணி,
சென்னை. விலை ரூ 3-2-0.

438-வது சூத்திரம். எனவே னெச்சம் வினையோடு முடிமே.

உரையாசிரியர் முதலிப மூவரும் எனவெனெச்சம் வினைகொண்டு முடியும் என்றனர். தெய்வச்சிலையார், 'வினையொடும்' என்று கொண்டு உம்மையாற் பெயரொடும் முடியுமென்றார்.

439, 440, 441, 442:- இச்சூத்திரங்களுக்கு உரையாசிரியர் முதலிய மூவர்கூறும் பொருள்களைவிடத் தெய்வச்சிலையார்கூறும் பொருள்கள் சூத்திரப்போக்குக்குப் பொருத்தமாயிருக்கின்றன.

448-வது கோடுவேன் கிளவி படர்க்கை யாயினும்
சூத்திரம். ....

உரையாசிரியர் இச்சூத்திரத்திற் கூறிய முதற்பொருளும் தெய்வச்சிலையார்கூறிய பொருளும் ஒன்று. நச்சினார்க்கினியர், உரையாசிரியர் உம்மைக்குக்கொண்ட பொருளையும் இச்சூத்திரப்பொருளாக உரைத்தனர். அது பொருந்தாது. நச்சினார்க்கினியர் சேனாவரையர்மேற் கூறும் மறுப்பு ஏற்புடைத்து.

450-வது செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல்
சூத்திரம். ....

உரையாசிரியர், நச்சினார்க்கினியர் இருவர்கூறும் பொருளும் ஒன்று; சேனாவரையர்கூறும் பொருள் வேறு; தெய்வச்சிலையார்கூறும் முதற்பொருள் வேறு. சேனாவரையர்மதமே ஏற்புடைத்து.

452-வது சூத்திரம். கடிசோல் லில்லைக் காலத்துப் படினே.

உரையாசிரியர் முதலிய மூவர் கூறும் பொருள் ஒன்று. தெய்வச்சிலையார் கூறுவது வேறு; அஃது ஏற்புடைத்தன்று.

455, 456, 457, 458, 459, 460:—இச்சூத்திரங்களுக்கு நால்வர்கூறும் உரையும் நோக்கற்பாலது.

461-வது ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
சூத்திரம். பன்மைக் காகு மிடனுமா றுண்டே.

இச்சூத்திரத்திற்கு 'ஒருமைசுட்டிநின்ற பெயர்ச்சொல்லும் பன்மைகொண்டுமுடியும் இடனும் உடைத்து' என்று உரையாசிரியரும், 'ஒருமைக்குரிய பெயர்ச்சொற் பன்மைக்காகு மிடமுமுண்டு'

எனச் சேனாவரையரும், 'ஒருமைகருதிய பெயராகிய நிலைமையையுடைய சொல் பன்மைக்குப் பொருந்திநிற்கும் இடமுமுண்டு' என்று நச்சினார்க்கினியரும், 'ஒருமைகுறித்த பெயர்ச்சொல் பன்மைக்காகுமிடனுமுண்டு' எனத் தெய்வச்சிலையாருங் கூறினர்.

இச்சூத்திரம் சாத்தியேகவசனத்தின் வழக்கை உணர்த்திற்று எனக் கொள்வது சாலும்.

எச்சவியல் முற்றும்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு முற்றும்.

மதிப்புரை.

சுகுமாரன்:— இது தூத்துக்குடி, திரு. S. பஞ்சாபகேசன் என்பவரால் இயற்றப்பெற்று நாடகஅரங்கங்களில் நடிப்பதற்கேற்ற கதையினமைதியும் நாடகமுறையும் இடையிடையே இனிய பாடல்களுங் கொண்டு விளங்குவதோர் தமிழ்நாடகம். மதுரைப் புத்தகவர்த்தகர் திரு. E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களால் நல்லகாகிதத்தில் திருத்தமாகவும் அழகாகவும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மேற்படி E M. கோபாலகிருஷ்ணக்கோனார்வர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணம் (சுருக்கம்) முதற்பகுதி:—இது, ஆங்கிலக் கலாசாலைகளில் உயர்தரப் பரீக்ஷைகளுக்குப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியுணர்ச்சியும் சமயவுணர்ச்சியு மொருங்கே யூட்டும்பொருட்டுச் சைவசமயிகளால் நன்கு போற்றப்படும் அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒன்பதின்மர்சரித்திரத்தைத் தொகுத்துச் சுருக்கிச் சென்னை தஞ்சை பாடசாலை இன்ஸ்பெக்டர் ஆபீஸ்களில் ஹெட் கிளர்க்காக இருந்த தமிழறிஞர் திரு. சே. சிவஞானம்பிள்ளையவர்களாற் செய்யுளும் வசனமும் விரவிவரச் செய்யப்பட்டுச் சென்னை ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸால் வெளியிடப்பட்டதாகும். இதனுட் கூறப்பட்டுள்ள ஒன்பதுநாயன்மாரைப்பற்றிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார்நம்பிதிருவந்தாதி, தொண்டர்புராணசாரச் செய்யுட்களுங் குறிப்புக்கள் முதலியனவு மிறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. இது முன்னும் ஒருமுறை வெளியிடப்பட்டதாயினும் அப்பதிப்பில் இல்லாத பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும் பிறவுங்கொண்டு இப்பதிப்பு விளங்குகிறது. இதன் விலை அணா 13. வேண்டுவோர் ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், 27, சின்னத்தம்பி தெரு, சென்னை என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மாணவர்

ஞானாபிவிருத்திசபையின்

இருபத்தாறாவதுவருடக்கொண்டாட்டத்தில்

ஷை கலாசாலை மாணவர்

ஜெ. நாராயணசுந்தரம் பாடிய

மங்கள வாழ்த்து.

திருவுறுகலையின்பொருவறுபுலமை
வாய்மொழிப்புலவர்வடமொழிதென்மொழி
யாய்வுறிற்சமனென்றறைந்தனரஃதே
வாயாகியதேவாயாகியதே
யாஅங்காணவாயாகியதே
தென்சொற்கடந்துவடசொற்கடற்கோ
ரெல்லைதேர்ந்ததொல்லிசையிராமன்
பெயர்புனைந்துலகமுயர்தருங்கூடலின்
வடமொழிக்கழகத்தலைமையுந்தென்மொழிச்
சங்கத்தமர்தருமங்கத்தினனெனு
முரிமையும்பூண்டவுரவோன்
அமிழ்தினுமினியதமிழ்வளர்சங்க
மாணவர்பயிலுமாணலங்கெழீஇய
ஆனாநல்லிசைஞானாபிவிருத்தி
யவையினிருபத்தாறாமாண்டின்
விழவின்றலைமைவிழைவின்மகிழ்கூர்ந்
தமர்ந்தருள்செய்தனனம்ம
எவருமகிழமேவியசிறப்பிற்
பாவருமன்னோனிராமசாமி
மறையவன்பல்புகழ்மல்கிவாழியவே
வாழியமாணவர்கழகம்
வாழியநந்தமிழ்மகிதலத்தானே.

*திருமுருகாற்றுப்படையும் நச்சினார்க்கினியர் உரையும்.

அமிழ்தினுமினிய செந்தமிழ்மொழியினுட் பத்துப்பாட்டு, கடைச்சங்கப்புலவர்களா லியற்றப்பெற்று அப்புலவர்பெருமக்களாலேயே தொகுக்கப்பட்ட தொகைநூல்களுள் ஒன்றென்பது அறிஞர்பலரும் அறிந்ததே. அத்தகைய பத்துப்பாட்டுள் முதற்பாட்டாக அமைந்துள்ள முருகாற்றுப்படை பதினோராந்திருமுறைப் பிரபந்தங்களின் வரிசையிலொன்றாகச் சைவப்பெருமக்களாற் சேர்க்கப்பெற்றுள்ளமையானும், அவர்களாலேயே பாராயணத்துக்குரிய நூலாக இன்றளவுஞ் சிரமேற்கொண்டு போற்றிவருவதாலும், ஒரு மலைக்குகையில் முன்னமேயடைக்கப்பட்டிருந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு சேர்த்துண்ணக்கருதித் தம்மையும் அக்குகையிலடைத்துவிட்டு நீராடப்போன ஒரு கொடிய பூதத்தை வெல்லக்கருதிய நக்கீரனார் முருகக்கடவுளைக்குறித்து இத் திருமுருகாற்றுப்படையைப் பாடி அப்பூதத்தினின்றும் விடுதல்பெற்றனர் என்னுங் கதையானும் "ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து—சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்—ஒருபதுபாட்டும்" என்று ஆன்றோராற் புகழப்பட்ட பத்துப்பாட்டுள் ஒன்றாதலானும் இதன்பெருமை நன்கு விளங்கும்.

இத்தகைப் பெருமைவாய்ந்தபாட்டைப் பாடினார், கடைச்சங்கப்புலவர்களுட் டலைமைபெற்று விளங்கியவரும் நெற்றிக்கண்காட்டினுங் குற்றங் குற்றமே யென ஆலவாயங்கயற்கணம்மைபாகனோடு அஞ்சாதெதிர்த்து உரையாடினவருமாகிய நக்கீரனாரென்பவராவர்.

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபை அங்கத்தினரும், இராமேசுவர தேவஸ்தான ஸம்ஸ்க்ருத பாடசாலையின் ப்ரின்ஸ்பாலுமாகிய ப்ருஹ்மஸ்ரீ V. S. ராமஸ்வாமீ சாஸ்திரியார் (B.A ,B.L.,) அவர்கள் தலைமையில் நிகழ்ந்த ஷை சங்கக்கலாசாலை மாணவர் ஞானாபிவிருத்திஸபையின் இருபத்தாறும் வருடக் கொண்டாட்டத்தில் ஷை கலாசாலை மாணவர் த. குமாரசாமி என்பவரால் எழுதிப்படிக்கப்பட்டது.

இப்புலவர்பெருமானாற் பாடப்பட்ட முருகாற்றுப்படையைப்பற்றியும், தொல்காப்பியம் பத்துப்பாட்டு கலித்தொகை சீவகசிந்தாமணி முதலிய இலக்கண இலக்கிய நூல்களுக்கு உண்மையுரைகண்டு உலகுக்குபகரித்த வள்ளலாகிய நச்சினார்க்கினியர் அதற்கியற்றிய உரையைப் பற்றியும் சிற்றறிவுடையேனாகிய அடியேன் சொல்லுவதாக முன்வர் தள்ளாது ஆசை வெட்கமறியாது என்னும் பழமொழியை மெய்யாக்கும். ஆதலாற் பிழைபொறுத்தருளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருப்பரங்குன்றம் முதல் பழமுதிர்சோலை யிறுதியாகவுள்ள ஆறு திருப்பதிகளையும் ஆறு படைவீடென உலகவழக்கில்மட்டும் வழங்கி வருகிறார்கள். இவ்வுலகவழக்கிலே படைவீடு என்பதற்குப் படையை விட்டிருக்குமிட மெனச் சிலர் பொருள்கூறுகின்றனர். அவர் கூறுகின்ற படியே முருகன் படைகளோடு சென்று தங்கின இடங்களென்று வைத்துக்கொண்டுபார்க்கினும் முதலில் திருப்பரங்குன்றம் இரண்டாவது திருச்சீரலைவாய், மூன்றாவது திருவாவினன்குடி, நான்காவது திருவேரகம், ஐந்தாவது பழமுதிர்சோலை, ஆறாவது குன்றுதோறாடல் என்று தான் வரிசைப்படுத்தல்வேண்டும். அங்ஙனமின்றி ஐந்தாவது குன்றுதோறாடலாகவும் ஆறாவது பழமுதிர்சோலையாகவும் வரிசைப் படுத்தியிருப்பதால் ஐந்தாவது ஒவ்வொருகுன்றிலுந் தங்கிவிட்டு ஆறாவது பழமுதிர்சோலையிற் றங்கினானெனல் பொருந்தாது.

அன்றியும், முருகன் சூரனைச்சம்மரித்தபின்னர் முதலில் திருச்செந்தூரிலும் இரண்டாவது திருப்பரங்குன்றமாதிய இடங்களிலுஞ்சென்று தங்கினனென்று கதையிருத்தலாலும் திருப்பரங்குன்றம் முதலிய ஆறிடங்களிலும் வரிசைக்கிரமமாகத் தங்கினனென்று கூறுதற்கிடமில்லை.

ஆகவே, படைவீடென்று வழங்குதற்குச் சாதாரண உலகவழக்கிலேயன்றி நூல்வழக்கிற் சிறிதும் ஆதாரமின்மையானும், இவ்வாற்றுப்படையின் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் அதுபற்றி யொன்றுங் கூறிச் செல்லாமையானும் படைவீடென்பதற்குப் பொருள் ஆய்ந்துரைத்தக்கதாயிருக்கிறது.

இனி முருகாற்றுப்படையுட் ''புலம்பிரிந்துறையுஞ்சேவடி' யெனக் கந்தழி கூறி, 'நின்னெஞ்சத்தின்னசைவாய்ப்பப்பெறுதி' யெனவுங் கூறி, அவனுறையுமிடங்களுங் கூறி, ஆண்டுச் சென்றால் அவன் விழுமிய

பெறலரும் பரிசில் நல்கும் எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெரு வளம் அவனும் பெறக்கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப் படையென உய்த்துணர்ந்து பொருள்கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையின் மறுக்க" என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்புறத்திணையியல் 36-ம்சூத்திரவுரையில் எழுதியிருத்தலைக் கொண்டு நாம் அறியக்கிடக்கின்ற தென்னையெனின் நச்சினார்க்கினியர்காலத்து இம் முருகாற்றுப்படையைப் புலவராற்றுப் படையென்று உய்த்துணர்ந்து பொருள்கூறிவந்தார்சிலருண்டென்பதும் அது பொருளன்றெனத் தக்க காரணத்தோடு மறுத்து முருகாற்றுப் படையென்பதே பொருளென்று காட்டிச் சென்றமையுமாம்.

ஆறு - வழி. படை - படுத்தல். இவ் விரண்டுசொல்லும் "ஈ ரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்—வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்—தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி" என்னும் (தொல். எழுத். ௪௧௧) சூத்திரவிதிப்படி ஈண்டு ஈரெழுத்துமொழி யாகிய நெடிற்றொடர்க்குற்றியலுகரம் வேற்றுமைச்சந்தியில் இனவொற் றிடையே மிக்கு வருமொழி வல்லெழுத்தொன்று தோன்றி ஆற்றுப் படையென்றாயிற்று.

திருமுருகாற்றுப்படையென்பது திருமுருகனிடத்தே ஆற்றுப் படுத்தலையுடையதாகிய நூலென ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் இந்நூலுக்குக் காரணப்பெயராயிற்று.

இம் முருகாற்றுப்படையை நக்கீரனா ரியற்றுதற்கு இலக்கணம் யாதோவெனின் தொல்காப்பியப் புறத்திணையியலினுள்ள 'தாவினல்லிசை' யென்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் - பெற்ற பெருவளம் பெறார்க் கறிவுறீஇச் - சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்னும் அடிகளேயாகும்.

முருகாற்றுப்படை யென்பதற்குப்பொருள் வீடுபெறுதற்குப் பக் குவமுடையா னொருவனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற் றுப்படுத்தது என்பதாம்.

'கண்டவர் விண்டிலர்' என்பது பழமொழியன்றே! அங்ஙன மிருக்க, வீடுபெற்றவன் வீடுபெறுதற்குப் பக்குவமுள்ளா னொருமகனை முருகனிடத்து முத்திபெறுதற்பொருட்டு வழிப்படுத்தல் எங்ஙனங் கூடுமெனின், முத்திநிலை பலவகைப்படும்; அவற்றுள் ஜீவன்முத்தியை யடைந்தவன் வழிப்படுத்தல் கூடுமென்க.

(1) திருப்பரங்குன்றம்.

இத்திருப்பதி 'கூடற்குடவயிற்குன்' றென இப்பாட்டிலேயே விளங்கக் கூறியிருப்பதால் இன்னவிடத்துள்ளதென்பது தெற்றென விளங்குகிறது.

நூல்பாடத்தொடங்குவோர் மங்கலமொழியை நூன் முதலில் வைத்துப் பாடல்வேண்டுமென்பது மரபாகலான் இந்நூலாசிரியரும் அம்முறையே 'உலகமுவப்ப' என உலகமென்னுஞ்சொல்லை முதலில் வைத்துத் தொடங்கியுள்ளார்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

என்ற அடிகளால் நூலாசிரியர் முருகன் மயில்வாகனனுயுள்ள தோற்றத்தைத் தொழிலுவமமும் வண்ணவுவமமும் பட வினையெச்ச வுவமமுகத்தால் மிகவும் அழகுபட விளக்கிச்சென்றுள்ளார். இவ்வடிகட்குச் "சீவான்மாக்கள் உவப்ப எழுந்து மகாமேருவை வலமாகத் திரிதலைச்செய்யும் எல்லாச்சமயத்தோரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்தே கண்டாற்போல இருவகை யிந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேற் சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும் விளங்குகின்ற ஒளி" என்று நூலாசிரியர்கருத்தறிந்து நச்சினர்க்கினியர் பொருள்கண்டுள்ளார். இந்நூன்முழுமையும் அங்ஙனமே. இந்நூலுக் கிவ்வாசிரியர் பொருள்காணுதிருந்திருப்பாராயின் நம்மனோரற் பொருள்காண்டல் மிகவு மரிது. "ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" என்னும் மூன்றுமடிபோன்ற அடிகட்குப் பொருள்காண்ட லதனினு மரிதாகவே முடியும்.

இனி ஞாயிற்றைப் பலர்புகழ்ஞாயிறு என அடைகொடுத்து உவமித்ததிலிருந்து அடியேற் கொரு பொருள்தோன்றுகிறது. அஃதென்னையெனின், பலசமயத்தோராலும் புகழப்படும் ஞாயிறு என உவமானப்பொருளைக் கூறியிருப்பதைக்கொண்டு உவமேயப்பொருளாகிய முருகவேளும் பலசமயத்தோராலும் புகழப்படுகின்றுனென்பதே.

திருப்பரங்குன்றைப்பற்றிச் சொல்லிச் செல்லவேண்டிய ஆசிரியர் அம்மட்டில் நில்லாது,

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்"

என்ற அடிகளாற் கூடலைப்பற்றியும் புகழ்ந்துகூறிச்செல்கின்றார். அதற்குக் காரணம் யாதோவெனின் கடைச்சங்கபுலவர்களுள் தாமு மொருபுலவராகவீற்றிருந்த சோமசுந்தரக்கடவு ளெழுந்தருளியிருக்குந் தலமென்பதுகருதியே யாகும்.

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்க"

என்னு மிவ்வடிகட்குப் "போரை வென்று விரும்பிக் கட்டின கொடிக் கருகே நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பா ரின்மையின் தூங்கியேவிடும்படி" என்பது நச்சினர்க்கினியருரை. இதனல் நாம் அறிந்துகொள்ளக்கிடப்பது யாதெனின் 'கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த குடி'யிலுதித்து வீரத்தில் மிகுந்துவிளங்கிய நம் தமிழ்நாட்டரசர்கள் போரை வென்று விரும்பிக் கட்டின கொடிக்கருகே பந்தையும் பாவையையும் கட்டித் தொங்கவிடுதல் வழக்கென்றும், அதுகண்டு பொறாது பிறவரசர் அப் பந்தையும் பாவையையும் அறுப்பின அவர்களோடு போர்தொடங்கி வெற்றிபெறுவார்களென்றும், ஒருவராலும் அறுக்கப்பெறாதிருப்பின் போர்தொடங்காது தமக்கு நிகராவார் ஒருவருமில்லையெனவுன்னிச் செம்மாந்து தனியரசுசெலுத்துவார்களெனவுந் தெரிகின்றது. "வரிப் புனை பந்தொடு பாவை தூங்க" என்னும் அடியினுரையில் "என்றது பகை வரைமகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற்குத்தூக்கினவென்றவாறு" என்னும் நச்சினர்க்கினியர்கருத்தும் ஈண் டறியற்பாலது.

(2) திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

"தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மருவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக

மந்திர விதியின் மாபுழி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்த செல்சம முருக்கிக்
கருவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவால் வள்ளியொடு நகையமர்ந் தன்றே"

என்னும் இவ்வடிகளால் முருகன் ஜீவான்மாக்களிடத்துள்ள கருணையி ஞலே ஒவ்வொருமுகத்தாலும் ஒவ்வொருதொழிலைச் செய்கின்ருனென் பதை விளக்கவேண்டிய ஆசிரியர் ஆறுமுகங்களின்றன்மையைப்பற்றியுந் தனித்தனி அழகாகச் சொல்லிச் செல்வதோடு மேலும் மற்றையவடிக ளால் அவ் வறுமுகங்களுக்கேற்பப் பன்னிருகரங்கட்கும் பயனுஞ் சொல்லிச் செல்கின்ருர்.

இனி, ஒருமுகம் வள்ளியொடு நகையமர்ந்தன்றே என்பது தன் பொருட்டன்றிப் பிறர்பொருட் டெங்ஙனம் பொருந்தும் என்னுங் கேள்வி யெழும்பலாம். இக்கேள்வி யெழும்புமென் றுகருதியே நச்சினுர்க் கினியர் "காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க. அது, 'தென்பா லுகந் தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்' என்பதனுட் 'பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்—விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்பதனுனுணர்க" என்று மிவ்வுரையை யெழுதலாயினர்.

'ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்—செம்பொறி வாங்கிய தோள்' என்றதனுல் முருகனுடையமார்பில் உத்தமவிலக்கணமாகிய மூன்று இரேகைக ளுள்ளனவென்பதும் அவைகள் தோளளவும் படர்ந்துசென் றிருக்குமென்பதுந் தெரிகின்றது.

(3) திருவாவினன்குடி.

இத்திருப்பதி பழனிமலையின் அடிவாரத்திலுள்ளது.

"சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்

பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவாத்
துனியில் காட்சி முனிவர் முற்புக"

என்று இத்திருப்பதியைப்பற்றிக் கூறு மிவ்வடிகளால் முனிவர்தன்மை பலவும் நன்குணரக்கிடக்கின்றன.

(4) திருவேரகம்

ஏரகம் என்பதற்குப் பொதுவாக மலைநாட்டகத்ததொரு திருப்பதி யென நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். சிலர் சுவாமிமலையையடுத்துள்ள கிராமமொன்று இன்றைக்கும் ஏரகாம் என்று வழங்குகிறது; அது ஏரகம் என்பதன் மரூஉவாகக்கொள்ளலாமெனக் கருதுகின்றனர். இத் தலத்து வழக்காகக் கூறப்பட்ட 'புலராக்காழகம்புலரவுடீஇ' ப் பூசை செய்தல் இன்றும் மலைநாட்டுவழக்காகக் காணப்படுதலின், 'ஏரகம்—மலை நாட்டகத்ததொரு திருப்பதி' யென்று நச்சினார்க்கினியர் எழுதியது பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது.

இத்திருப்பதியைப்பற்றிப் பதின்மூன்றடிக்குட் சுருக்கமாகக் கூறி யிருப்பினும், அந்தணர்களுடைய மேன்மையைப்பற்றியும் அவர்கள் முருகனை வழிபடுந்திறத்தைப்பற்றியும் மிகவும் அழகுபடக்கூறியிருக் கின்றார்.

'இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடி' யென்றமையால் தாய்தந் தையாகிய இருவர்குடியுள் ஒன்று ஓங்கியும் மற்றொன்று தாழ்ந்து மிராது இரண்டுமொருங்கே யோங்கியிருத்தல்வேண்டுமென்பதும் 'நாவி யல் மருங்கின் நவிலப் பாடி' யென்றமையால் மந்திரங்களைப் பிறர்செவிக் குக் கேளாவண்ணம் நாப் புடைபெயருமளவில் மெதுவாக உச்சரிக்க வேண்டுமென்பதுங் கிடைக்கின்றதி.

(5) குன்றுதோறாடல்.

குன்றுதோறாடல் என்பது பலமலைகளிலும் ஆடல் என்றுபொருள் படும். இதைப்பற்றியெழுந்த அடிகளாற் கூறுவதாவது:— தன்வேடம் பூண்ட ஒரு வேலன்மாட்டு முருகன் ஆவேசமூர்த்தியாகத்தோன்றித் தன்னைச் சேவிக்கும் மகளிர் சேவித்துப் பாடும் மகளிர் ஆகிய இவர்க

ளோடு தீண்டிவிளையாடுதற்குரிய மகளிரிடத்துக் கைகொடுத்து விரும்பி வந்துள்ளார்க்கு வெற்றிமுதலியனகூறுதற்பொருட்டு மலைகள்தோறும் விளங்கியிருப்பனென்பதாம்.

(6) பழமுதிர்சோலை.

இத் திருப்பதி திருமாலிருத்தற் கிடமாகித் திருமாலிருஞ்சோலை யென்னும் பெயராலும் வழங்கப்படுகிறது. "புண்ணிய சரவணம் (சில. கக. கூச.) என்னும் பொய்கை அப்பெயருடன் இக்காலத்தும் அங்கே யிருத்தலும் நன்கு புலப்படுத்தும்" என்று பிருஹ்மஸ்ரீ மஹாமஹோ பாத்யாய ஐயரவர்கள் எழுதியிருத்தலைக்கொண்டு முருகனுக்கும் பழ முதிர்சோலை யிடமாக இருந்திருக்கவேண்டுமென்பது தெரிகின்றது.

"...................................குறமகள்
முருகிய, நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்"

என்னும் அடிகளால் அக்காலத்தும் தெய்வமில்லையென்பார் சிலருண் டெனவும், அவர்க ளஞ்சித் தெய்வமுண்டென்று நம்புதற்பொருட்டாக வே குறமகள் முருகனைத் தன்னிடத்து ஆவேசமூர்த்தியாக வா வழைத்து வெறியாட்டாடுவாளென்பதூஉந் தெரிகின்றது.

இத் திருப்பதியைப்பற்றிக் கூறு மடிகள் பலவற்றுள்ளும் "அறு வர் பயந்த வாறமர் செல்வ" என்பது முதலிய அடிகளால் வீடுபெற்றான் வீடு பெறுதற்குரியானைநோக்கி இங்ஙனம் முருகனைப் பலவாறு புகழ்ந்து செல். அங்ஙனஞ் செல்வாயாயின் முருகன் தானே விரும்பிவந்து உனக்கு வீடருள்வன் என்று கூறுவதாக ஆசிரியர் கூறுகின்றபாகம் மிகவும் சூழ்ச்சிவாய்ந்தது. ஏனெனில், ஒரு செல்வன்மாட்டு ஒரு வறிய வன் செல்லும்பொழுது அச் செல்வனைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து சென்றால் அச்செல்வன் மனமிரங்கி அவன் வறுமையைப் போக்கியருளு தல் சாதாரணவுலகவழக்கிலேயும் நடைபெற்றுவருவதால்.

இன்னும் இவ்வாற்றுப்படையைப்பற்றிச் சிறிது கூறவேண்டு மென்ற அவாவிருப்பினும் எனக்குக்கொடுத்த இச்சிறுபொழுதின்கண் ணே முடித்துக்கொள்ளவேண்டியவனா யிருக்கிறபடியால் இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

கு. குமாரசாமி.